

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 84 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 16 – வியாழக்கிழமை 02 நவம்பர் 2023 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:82 - Issue 84: Thiruvalluvar Year - 2054 - Ayppasi 16 - Thursday 02 November 2023 - Trichy ★★ 12 Pages ₹5.00


# மாநிலங்களைக் காப்போம்; இந்தியாவைக் காப்போம்! “இந்தியா” கூட்டணியை வெற்றிபெறச் செய்வோம்!

## “Speaking for India” பாட்காஸ்ட் 3-ல் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!




திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், “மாநில சுயாட்சி: உண்மையான கூட்டுறவுக் கூட்டாட்சியியலுக் கான எனது குரல்” என்ற தலைப்பில் நேற்று (31.10.2023) Speaking for India பாட்காஸ்ட் சீரிசின் மூன்றாவது அத்தியாயத்தை வெளியிட்டு தமிழில் ஆற்றிய உரை – மலையாளம், கன்னடம், தெலுங்கு, இந்தி ஆகிய மொழிகளில் மொழி மாற்றம் செய்து வெளியிடப்பட்டுள்ளது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

உங்கள் எல்லோரையும் Speaking for India Podcast-இல் சந்திக்கும் ஸ்டாலினின் வணக்கம். இந்த மூன்றாவது எபிசோடைத் தொடங்குவதற்கு முன்பு, உங்களிடம் ஒரு விஷயத்தை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

செப்டம்பர் 23-ஆம் தேதி வெளியான இரண்டாவது எபிசோடில், சி.ஏ.ஜி அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த பி.ஜே.பியின் ஏழு மெகா ஊழல்களைப் பற்றிப் பேசியிருந்தேன். அவையெல்லாம் உண்மை என்று ஒன்றிய அரசே ஒப்புக் கொள்வது போன்று, ஒரு விஷயத்தைச் செய்திருக்கிறார்கள்.

இந்தியா முழுவதும் இந்த “Speaking for India” ரீச் ஆன பின்பு, அக்டோபர் இரண்டாவது வாரத்தில் ஒரு செய்தி வந்தது. அதன் தலைப்பு என்ன என்றால், ”பா.ஜ.க அரசின் ஊழல்களை வெளிக் கொண்டு வந்த சி.ஏ.ஜி அதிகாரிகள் செப்டம்பர் 12-ஆம் தேதியே கூண்டோடு மாற்றம்”. அதுதான் அந்தச் செய்தி!

எவ்வளவு ஸ்பீடாக ஆக்ஷன் எடுத்திருக்கிறார்கள் பார்த்தீர்களா..? சரி… அதே வேகத்தோடு இந்த எபிசோடில் பேசப்போவதையும் உடனே கொடுக்கிறார்களா என்று பார்ப்போம். இந்த எபிசோடில் நான் பேசப்போவது: மாநில உரிமைகள்!

### அழகிய மலர்கள் நிரம்பிய அற்புதமான பூந்தோட்டம்!

DMK, தனக்கென்று தனித்துவமான கொள்கைகளோடு 75ஆவது ஆண்டு விழாவை கொண்டாடுகிற கட்சி மட்டுமல்ல! இன்றைக்கு நாடாளுமன்றத்தில் இந்தியாவின் மூன்றாவது பெரிய கட்சியாக இருந்து இந்திய ஜனநாயகத்தைக் காப்பாற்றப் போராடுகிற கட்சியும் கூட! அப்படிப்பட்ட DMK-வின் கொள்கைகளில் முக்கியமானது ‘மாநில சுயாட்சி’!

இந்தியா என்பதே, கூட்டாட்சித்தன்மை கொண்ட நாடு. இங்கே பல்வேறு மொழிகள், இனங்கள், பண்பாடுகள், பழக்க வழக்கங்கள் கொண்ட மக்கள் வாழுகிறார்கள். நம்முடைய மக்களிடம் ஏராளமான சமய நம்பிக்கைகள் இருக்கிறது; பல்வேறு வழிபாட்டு முறைகள் இருக்கிறது. அவர்களுக்கான அரசியல்சட்ட உரிமைகளும் இருக்கிறது. இத்தனை வேறுபாடுகளையும் கடந்து, நாம் எல்லாரும் ஒற்றுமையாக வாழ்கிறோம். சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால், இந்தியா பல்வேறு அழகிய மலர்கள் நிரம்பிய அற்புதமான பூந்தோட்டம்!

அதனால்தான், நம்முடைய நாட்டின் நிர்வாக அமைப்பை உருவாக்கியவர்கள், ஒற்றைத்தன்மை கொண்ட நாடாக இல்லாமல், கூட்டாட்சி நெறிமுறை கொண்ட மாநிலங்களின் ஒன்றியமாக உருவாக்கினார்கள்.

நம்முடைய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், இதற்கு முன்பு குஜராத் மாநில முதலமைச்சராக இருந்தார். அப்போதெல்லாம் மாநில உரிமைகளுக்கு ஆதரவாக நிறைய பேசினார். ஆனால், பிரதமராகி டெல்லிக்கு வந்ததற்கு பின்பு, அரசியலமைப்புச் சட்டத்தின் முதல் வரியே அவருக்குப் பிடிக்காமல் போய்விட்டது. அந்த வரி என்ன என்றால், “India, that is Bharat, shall be a Union of States!”.

### மாநில உரிமைகளைப் பறிக்கும் பிரதமர்!

முதலமைச்சராக மாநில உரிமைகளைப் பேசியவர், இப்போது பிரதமராகி மாநில உரிமைகளைப் பறிக்கிறார்! பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க. ஆட்சி, மாநிலங்களை ஒழிக்க வேண்டும், அப்படி இல்லை என்றால், முனிசிபாலிட்டிகளாக மாற்றிட வேண்டும் என்று நினைக்கிறது. மோடி அவர்கள் முதலமைச்சராக இருந்த வரைக்கும் பேசியதற்கும், பிரதமர் ஆனதும் செய்வதற்கும் இருக்கும் வேறுபாட்டிற்கு, சில எடுத்துக்காட்டுகளை மட்டும் உங்களிடம் சொல்ல விரும்புகிறேன்.

**★ டெல்லியை மையப்படுத்தாமல் மாநிலங்களுக்கு ஏற்ற அணுகுமுறையோடு திட்டங்கள் தீட்டப்படும் என்று பிரதமர் சொன்னார். ஆனால், மாநில முதலமைச்சர்கள் பங்கேற்றுக் கருத்து தெரிவிக்கும் திட்டக் குழுவைக் கலைத்துவிட்டு, சத்தே இல்லாத ‘நிதி ஆயோக்’ அமைப்பை உருவாக்கினார்.**

**★ மாற்றுக்கட்சி ஆட்சிகளைப் பழி வாங்கமாட்டேன் என்று சொன்னார். ஆனால் பா.ஜ.க. என்ன செய்கிறது? எங்கு எல்லாம் பா.ஜ.க. ஆட்சிக்கு வர முடியவில்லையோ, அங்கு இருக்கும் கட்சிகளை இரண்டாக, மூன்றாக உடைத்து, எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்கி ஆட்சி நடத்துகிறார்கள்.**

**முக்கியமாக இன்னொன்றையும் பிரதமர் சொன்னார்…**

**★ “கூட்டாட்சிக் கருத்தியலை ஆதரிப்பவன் நான். டெல்லிக்குக் காவடி தூக்கும் நிலைமையை மாற்றுவேன்” என்று சொன்னார். ஆனால், இப்போது என்ன நடக்கிறது என்றால், மாநில அரசின் திட்டங்களை நிறைவேற்றக்கூட, ஒன்றிய அரசின் வாசலில் காத்திருக்க வேண்டிய நிலையை உருவாக்கியிருக்கிறார்கள்.**


**★ மறைமுக வரிவிதிப்பில் சீர்திருத்தம் செய்ய எல்லா மாநில அரசுகளோடும் ஆலோசனை செய்வோம் என்று பா.ஜ.க தேர்தல் அறிக்கையில் சொன்னார்கள்.**

### ஜி.எஸ்.டி.யால் மாநில நிதி நிலைமை ஐ.சி.யூ.வில் இருக்கிறது!

**★ கூடுதலாகப் பிரதமர், மாநில அரசுகளுக்கு அதிக நிதி ஆதாரங்களை வழங்குவோம் என்று சொன்னார்… ஆனால், ஜி.எஸ்.டி. இழப்பீடு வழங்கும் காலத்தைக் கூட நீட்டிக்க முடியாது என்று சொல்லிவிட்டார். மாநிலங்களின் பங்கையும் ஒழுங்காகக் கொடுப்பதில்லை. சுருக்கமாக சொல்ல வேண்டும் என்றால், மாநிலங்களின் நிதி நிலைமை ஜி.எஸ்.டி.யால் இப்போது ஐ.சி.யூவில் இருக்கிறது!**

**12-ஆவது நிதி கமிஷனில் இருந்து நிதி ஒதுக்கீடு குறைந்துவிட்டதனால், கடந்த 19 ஆண்டுகளில் நம்முடைய தமிழ்நாட்டிற்கு சுமார் 85 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, இனிமே ஒவ்வொரு ஆண்டும் 10 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் தமிழ்நாட்டிற்கு இழப்பு ஏற்படப் போகிறது.**

### தலைவர் கலைஞர் சட்டமன்றத்தில் நிறைவேற்றிய மாநில சுயாட்சி தீர்மானம்!



1974ஆம் ஆண்டு தலைவர் கலைஞர், நாட்டுக்கே முன்னோடியாக, மாநில உரிமைகளுக்கு வலு சேர்க்க இராஜமன்னார் குழு அமைத்தார்; அந்தக் குழுவின் பரிந்துரைகளைச் சட்டமன்றத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க மாநில சுயாட்சித் தீர்மானமாக நிறைவேற்றினார். அந்த தீர்மானத்தில், முக்கியமான சில வரிகளை மட்டும் சொல்கிறேன்…

**“மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட மாநில ஆட்சிகள் தடையின்றிச் செயல்படவும், மாநில சுயாட்சி பற்றியும் இராசமன்னார் குழுவின் பரிந்துரைகள் மீதும் தமிழ்நாடு அரசு அளித்திருக்கும் கருத்துரைகளை மத்திய அரசு ஏற்று, மத்தியில் கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி கொண்ட உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்கும் அடிப்படையில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டும் என்று இப்பேரவை முடிவு செய்கிறது”.** இந்த தீர்மானத்தைத் தமிழ்நாட்டில் அப்போது இருந்த இரண்டு அவைகளிலும் நிறைவேற்றினார்.

**அதேமாதிரி, கிராமப்புற ஏழை - எளிய தாய்மார்களின் வாழ்வாதாரத்திற்கு உயிர் மூச்சாக இருக்கும் 100 நாள் வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு நிதியைக் குறைத்தது மட்டுமல்ல, வேலை செய்யும் தாய்மார்களுக்குச் சம்பளம் கூட ஒழுங்காகக் கொடுக்காமல் பா.ஜ.க. ஆட்சியில் இழுத்தடிக்கிறார்கள்.**

- **நாட்டை பாதுகாக்க ஒரே கவசம் மாநில சுயாட்சிதான்!**
- **சர்வாதிகார ஆட்சியை உருவாக்க நினைக்கும் பா.ஜ.க.!**
- **நிதி ஆதாரங்கள்: பா.ஜ.க.வின் உண்மை முகம் என்ன?**
- **ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் மாநில உரிமைகள் பறிக்கப்படுகிறது!**




இந்த நிலைமை தமிழ்நாட்டிற்கு மட்டும் என்று நினைக்காதீர்கள். இதை கேட்டுக்கொண்டு இருக்கும் உங்கள் எல்லோரின் மாநிலத்திலும் இதே தான் நிலைமை!

எல்லாவற்றுக்கும் மேல், இப்போது ஒன்றிய அமைச்சர் ஒருவர் என்ன சொல்கிறார் என்றால், “மோடி படத்தைப் போடவில்லை என்றால், மாநில அரசுகளின் திட்டங்களுக்குத் தருகிற நிதியை நிறுத்துவோம்” என்று சொல்கிறார்…! இதுதான் மாநிலங்களுக்கு அதிக நிதி ஆதாரங்களைத் தருவோம் என்று சொன்ன பா.ஜ.க. ஆட்சியின் உண்மை முகம்!

மாநிலப் பிரச்சினைகளுக்கு, சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு இடையே கவுன்சில் அமைத்து, தீர்வு காண்போம் என்று சொன்னார்கள். அந்தக் கவுன்சிலையும் முடக்கிவிட்டார்கள்.


### மாநில நிர்வாகத்தை முடக்குவதே பா.ஜ.க.வின் ஆக்ஷன் பிளான்!

மாநிலங்களின் கருத்தை கேட்கவும் மனசில்லை… அரசியல் சட்டம் வழங்கிய அதிகாரத்திற்குள்ளேயும் மாநிலங்களைச் செயல்பட விடுவதில்லை… ஆளுநர் மாளிகைகளை வைத்து மாநில நிர்வாகத்தை முடக்குவதை ஒரு ஆக்ஷன் பிளானாகவே வைத்திருக்கிறது பா.ஜ.க.!

அதனால்தான், ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் பிரதிநிதிகள் சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பிய 19 சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் தராமல் இருக்க பா.ஜ.க. ஆளுநரைப் பயன்படுத்துகிறது. மாநிலங்களின் உரிமையையும் - சட்டமன்றங்களின் மாண்பையும் எப்படியெல்லாம் சிறுமைப்படுத்துகிறார்கள் என்று பாருங்கள்!

இவ்வாறு, படிப்படியாக ஒற்றை கட்சி - ஒற்றைத் தலைமை - ஒற்றை அதிகாரம் பொருந்திய பிரதமர் என்று நாட்டை நகர்த்த முயற்சி செய்கிறார்கள் என்று சொல்வதைவிட, உலகத்தின் பெரிய இந்திய ஜனநாயக அமைப்பையே சின்னாபின்னப்படுத்தி சிதைத்துக் கொண்டு இருக்கிறார்கள். மொத்தத்தில், பா.ஜ.க. ஆட்சியில் மாநில உரிமைகள் நசுக்கப்பட்டு, நம் அரசியல் சட்டம் தந்த கூட்டாட்சிக் கருத்தியல், ஜனநாயகம் என எல்லாம் மக்களோடு சேர்ந்து கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கிறது!


தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## முதலமைச்சராக மாநில உரிமைகளைப் பேசிய மோடி பிரதமராகி மாநில உரிமைகளைப் பறிக்கிறார்!

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 02-11-2023

# ஒன்றிய அரசின் நிலைப்பாடு மாபெரும் தவறு

காசாவில் உடனடியாகப் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்ற ஐக்கிய நாடுகள் அவையின் பொதுச் சபை தீர்மானத்தை ஆதரிக்காமல் - வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் வெளியேறியது ஒன்றிய பா.ஜ.க. அரசின் மாபெரும் தவறு ஆகும். பாதிக்கப்படும் காசா மக்கள் பக்கம் நிற்கிறோம் என்ற நிலைப்பாட்டுக்கு இது எதிரானது மட்டுமல்ல, இஸ்ரேலை ஆதரிக்கும் நிலைப்பாடு ஆகும் இது.

**காசாவில் கடந்த 20 நாட்களுக்கும் மேலாக இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் உயிரிழந்தவர் எண்ணிக்கை எட்டாயிரத்தைத் தொடப்போகிறது. இதில் 3,500க்கும் மேற்பட்டவர்கள் சிறுவர்கள். இந்த நேரத்தில் கூட போரை நிறுத்துங்கள் என்ற தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவிக்க வில்லை என்றால், 'பயங்கரவாதத்துக்கு எதிரானவர்கள் நாம்' என்று பேசுவதற்கான யோக்கியதையை இந்திய நாடு எப்படி பெற முடியும்?**

வடக்கு காசாவில் இருந்து கடந்த 11-15 ஆம் தேதிகளில் மட்டும் 10 லட்சம் மக்கள் வெளியேறும் நிலைமையை இஸ்ரேல் உருவாக்கியது. 13 ஆம் தேதிக்குள் இவர்கள் அனைவரும் வெளியேற வேண்டும் என்று இஸ்ரேல் எச்சரிக்கை விடுத்தது. எனவே இவர்கள் வடக்கு காசாவில் இருந்து தெற்கு காசாவுக்கு இடம் பெயர்ந்தார்கள். அங்கும் குடிநீர் கிடையாது. மின்சாரம் கிடையாது. மருந்துப் பொருட்கள் கிடையாது. எனவே பெரும்பாலானவர்கள் மருத்துவமனைகளுக்குள் தஞ்சம் புகுந்தார்கள். மருத்துவமனைகள் மொத்தமும் சந்தைகள் போலக் காணப்பட்டன. மருத்துவமனையில் பிறந்த குழந்தைகள், அவசர அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்கள் என பலரது உயிர்கள் அபாயக் கட்டத்தை அடைந்திருப்பதாக உலக சுகாதார அமைப்பே கடந்த 16 ஆம் தேதி அறிக்கை கொடுத்தது. தெற்கு காசாவில் இருக்கும் மருத்துவ மனைகளை மூடுவதற்கும் இஸ்ரேல் உத்தரவிட்டதாக ஐ.நா. தெரிவித்தது.

இந்த நிலையில் காசா மருத்துவமனைகள் மீதே கடந்த 16 ஆம் தேதி குண்டுகள் வீசியது இஸ்ரேல். 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார்கள். காசா நகரத்தில் இருந்த அல் அஹ்லி மருத்துவமனை மீது வான்வெளி தாக்குதலை நடத்தியது இஸ்ரேல் ராணுவம். தஞ்சம் அடைந்திருந்த பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டார்கள். போரில் மருத்துவமனைகள் மீது தாக்குதல் நடத்தக் கூடாது என்பது மிகமிகச் சாதாரணமான அடிப்படை விதியாகும். அதையும் மீறியது இஸ்ரேல்.

இப்படிப்பட்ட நிலைமையில் பாலஸ்தீன அதிபருடன், இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் தொலைபேசியில் பேசினார். இஸ்ரேல் - பாலஸ்தீன ஹமாஸ் ஆகிய இருவருக்கு இடையிலான போர் தொடங்கி 13 நாட்களுக்குப் பிறகு மோடி முதன்முதலாக பாலஸ்தீன அதிபருடன் பேசினார்.

பாலஸ்தீன அதிபர் மஹ்மூத் அப்பாஸுடன் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, காசா மருத்துவமனை தாக்குதலில் உயிரிழந்த மக்களுக்கு இரங்கல் தெரிவித்ததாகவும், பாலஸ்தீன மக்களுக்கான இந்தியாவின் மனிதாபிமான உதவிகள் தொடரும் என்று சொன்னதாகவும் தகவல்கள் வெளியானது. 'பயங்கரவாதம், வன்முறை, குறைந்து வரும் பாதுகாப்பு நிலைமை குறித்து அப்போது இந்தியப் பிரதமர் கவலைதெரிவித்தார்' என்றும், 'இஸ்ரேல்-பாலஸ்தீனபிரச்சினையில் இந்தியாவின் நீண்ட காலக் கொள்கைகள் தொடரும் என்று இந்தியப் பிரதமர் தெரிவித்தார்' என்றும் பிரதமர் அலுவலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டு இருந்தது. இது உள்ளார்ந்த அக்கறையுடன் செய்யப்பட்ட செயலாக இருக்குமானால் ஐ.நா.வில் கடந்த 28 ஆம் தேதி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இந்தியா ஆதரித்திருக்க வேண்டும்.

**'குடிமக்களின் பாதுகாப்பு, சட்டபூர்வ மற்றும் மனிதாபிமானக் கடமைகளை உறுதி செய்தல்' என்பதுதான் ஐ.நா. தீர்மானத்தின் தலைப்பாகும். 'காசா மக்களுக்கு உடனடியாக மனிதாபிமான உதவிகள் கிடைக்க வேண்டும். அங்கு ஐ.நா. மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அமைப்பு களின் பாதுகாப்பான அணுகலை உறுதி செய்ய வேண்டும். காசாவின் வடக்குப் பகுதியில் இருந்து தெற்குப் பகுதிக்கு மக்கள் இடம்பெயர வேண்டும் என்ற இஸ்ரேலின் உத்தரவை திரும்பப் பெற வேண்டும். சட்டவிரோதமாக பிடித்து வைத்துள்ள குடிமக்கள் அனைவரையும் எந்த நிபந்தனையுமின்றி உடனடியாக விடுவிக்க வேண்டும். பதற்றத்தைத் தணிக்கும் வகையில் அனைத்துத் தரப்பினரும் அதிகபட்சக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும்' - இது தான் ஐ.நா. தீர்மானம் ஆகும்.**

ஐ.நா.வின் தீர்மானத்தில் இஸ்ரேல் நாட்டை பெரிய அளவில் கண்டிக்கவில்லை. கண்டனம் தெரிவிக்கவில்லை. ஐ.நா.வின் தீர்மானம் என்பது கூட 'மனிதாபிமான' குரலை எதிரொலிப்பதாக மட்டும்தான் அமைந்திருந்தது. மனித உரிமைக் குரலை எதிரொலிப்பதாக அமையவில்லை. ஆக்கிரமிப்பைக் கண்டிக்கவில்லை. இத்தகைய சாதாரண தீர்மானத்தைக் கூட ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு ஆதரிக்க மனமில்லை.

போர் நிறுத்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக 120 நாடுகள் வாக்களித்துள்ளது. எதிராக 14 நாடுகள் வாக்களித்துள்ளது. 45 நாடுகள் வாக்களிக்கவில்லை. அதில் இந்தியாவும் ஒன்று. ஹமாஸ் தாக்குதலைக் கண்டிக்க வேண்டும் என்று கனடா ஒரு திருத்தம் கொண்டு வந்துள்ளது. அந்த திருத்தத்தை ஆதரித்து ஒன்றிய பா.ஜ.க. அரசு வாக்களித்துள்ளது. இதன் மூலமாக பா.ஜ.க.வின் இரட்டை வேடம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

**'பயங்கரவாதம், வன்முறை, குறைந்து வரும் பாதுகாப்பு நிலைமை குறித்து இந்தியப் பிரதமர் கவலை தெரிவித்தார்' என்ற பழைய செய்திக்கு முற்றிலும் விரோதமானது இந்த நிலைப்பாடு. ஐ.நா. தீர்மானத்தை ஆதரிப்பதன் மூலமாகத்தான் பயங்கரவாதம், வன்முறைக்கு எதிரான தனது குரலை பா.ஜ.க. அரசு வலியுறுத்தி இருக்க முடியும். பாலஸ்தீன பிரதமரிடம் தொலைபேசியில் பேசுவதால் அல்ல.**

மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்காமல் காலம் தாழ்த்திவரும்

# ஆளுநர் ஆர்.என். ரவி மீது உச்சநீதிமன்றத்தில் வழக்கு!

## தமிழ்நாடு அரசு தொடர்ந்தது!

**புதுடெல்லி, நவ.2 -**

**நிலுவையில் உள்ள மசோதாக்களுக்கு காலதாமதமின்றி ஒப்புதல் வழங்கக் கோரி, ஆளுநர் ஆர்.என். ரவிக்கு எதிராக தமிழ்நாடு அரசு சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. ஆளுநர் ஆர்.என்.ரவி, அரசியல் எதிரிபோல் செயல்படுவதாக தமிழ்நாடு அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.**

தமிழ்நாடு ஆளுநராக ஆர்.என். ரவி கடந்த 2021ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பதவியேற்றார். அவர் பதவியேற்றது முதல், தமிழ்நாடு அரசுடன் தொடர்ந்து மோதல் போக்கை கடைப்பிடித்து வருவதையே வழக்கமாக கொண்டுள்ளார். தமிழ்நாடு அரசு அனுப்பும் கோப்புகளுக்கு உடனுக்குடன் கையெழுத்து போடாமல், ஒவ்வொரு கோப்புக்கும் விளக்கம் கேட்பதையே வாடிக்கையாக வைத்துள்ளார்.

அரசியல் எதிரிபோன்று செயல்படும் ஆளுநர் ஆர்.என்.ரவி, தமிழ்நாடு சட்டமன்றம் தனது கடமைகளைச்செய்ய விடாமல் முட்டுக்கட்டை போடுகிறார், மசோதாக்களுக்கு ஒப்புதல் தராமல் தாமதிப்பதன் மூலம் பேரவை செயல்பாடுகளையே ஆளுநர் தடுக்கிறார். மேலும், ஆளுநரின் செயல்பாடு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு மற்றும் அரசமைப்புச் சட்டத்தின் செயல்பாட்டுகளுக்கு முட்டுக்கட்டையாக உள்ளது.

பல்வேறு மசோதாக்களை நிலுவையில் வைத்துள்ளது மட்டுமின்றி, ஊழல் வழக்குகள் தொடர அனுமதி தருவதிலும் ஆளுநர் தாமதம் செய்கிறார். சரியான காரணங்களை தெரிவிக்காமல், அரசு அனுப்பும் கோப்புகளை ஆளுநர் திருப்பி அனுப்புகிறார். ஆளுநர் திருப்பி அனுப்பிய கோப்புகளை அரசு உரிய விளக்கத்துடன் மீண்டும் அனுப்பியபோதும் ஆளுநர் ஒப்புதல் தர மறுக்கிறார்.

அரசால் அனுப்பப்படும் கோப்புகள், அரசாணைகள் மற்றும் கொள்கை முடிவுகளுக்கு ஒப்புதல் தராமல் தாமதிக்கும், ஆளுநரின் இந்த நடவடிக்கையால் டி.என்.பி.எஸ்.சி. செயல்பாடு பாதிக்கப்பட்டுள்ளன.

எந்தவொரு அவசர சட்டமும் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு 6 வாரங்களில் அது நிரந்தர சட்டமாகிருக்க வேண்டும். தற்போது வரை 10க்கும் மேற்பட்ட மசோதாக்களுக்கு கையெழுத்து போடாமல் ஆளுநர் ஆர்.என்.ரவி நிலுவையில் வைத்துள்ளார். அந்த வகையில், கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகிகள் பதவிக்காலத்தை ஐந்து ஆண்டுகளிலிருந்து மூன்று ஆண்டுகளாக குறைப்பது தொடர்பான சட்டத்திருத்தம், மாநிலப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை அரசுக்கு வழங்குதல், தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக்கழகத்தை உருவாக்குவது உள்ளிட்ட மசோதாக்கள் தி.மு.க. ஆட்சியில் அனுப்பப்பட்டுள்ளன.

மேலும், கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் அமைச்சர்களாக இருந்த விஜயபாஸ்கர், ரமணா, வேலுமணி, தங்கமணி உள்ளிட்டோர் மீதான ஊழல் புகாரில் வழக்குப்பதிவு செய்ய 2022 செப்டம்பர் மாதம் அரசு அனுமதி கோரிய நிலையில், இதுவரை அனுமதி தராமல் ஆளுநர் இழுத்தடித்து வருகிறார்.

மேலும், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய தலைவராக, ஓய்வு பெற்ற தமிழ்நாடு காவல்துறை தலைவர் சைலேந்திர பாபுவை நியமனம் தொடர்பாக மசோதாவை ஆளுநர் ஆர்.என்.ரவி திருப்பி அனுப்பி விட்டார். ஆளுநரின் இந்த நடவடிக்கையால் அரசு பணிகள் முடங்கியுள்ளன.

இந்நிலையில், ஆளுநர் ஆர்.என். ரவி கிடப்பில் வைத்துள்ளதற்கு எதிராக, உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்கு தொடுத்துள்ளது. தமிழ்நாடு அரசு சார்பில் வழக்கறிஞர் சபரிஷ் சுப்ரமணியன் தாக்கல் செய்துள்ள மனுவில், தமிழ்நாடு சட்டப் பேரவையில் நிறைவேற்றிய மசோதாக்கள் மற்றும் தமிழ்நாடு அரசு உத்தரவுகளுக்கு உரிய நேரத்தில் ஒப்புதல் வழங்காமல் ஆளுநர் கிடப்பில் போடுவதால் அரசு பணிகள் முடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் சாசன பிரிவுகள் 200 மற்றும் 163ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை ஆளுநர் தவறாகப் பயன்படுத்தி உள்ளதாக குற்றம்சாட்டியுள்ள தமிழ்நாடு அரசு, நீட் விலக்கு மசோதா, பல்கலைக்கழக சட்டங்களை திருத்துவதற்கான மசோதா உள்ளிட்ட 12 மசோதாக்கள், 4 நடவடிக்கை உத்தரவுகள், 54 கைதிகளின் முன்கூட்டி விடுதலை தொடர்பான கோப்புகள் உள்ளிட்டவை தமிழ்நாடு ஆளுநரால் முடக்கி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆளுநர் பதவி ஒரு சம்பிரதாய பதவி என்றும், ஆளுநர் அமைச்சரவை ஆலோசனையின்படி செயல்படக் கடமைப்பட்டவர் எனவும் முந்தைய வழக்குகளில் உச்சநீதிமன்றம் கூறியுள்ளதை சுட்டிக் காட்டியுள்ள தமிழ்நாடு அரசு, மசோதாக்கள் மற்றும் அரசு உத்தரவுகளுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க சர்க்காரியா கமிஷன் பரிந்துரை அடிப்படையில் கால வரம்பு நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளது.

உச்சநீதிமன்ற தீர்ப்பை மதிக்காமல் கர்நாடக அரசு செயல்படுகிறது!

# காவிரி ஒழுங்காற்றுக் குழு தனது பணியை முறையாகச் செய்யவில்லை!

## நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, நவ.2 -

உச்சநீதிமன்ற தீர்ப்பை மதிக்காமல், காவிரி விவகாரத்தில் கர்நாடக அரசு தொடர்ந்து பிடிவாத போக்குடன் செயல்படுவதாக, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் குற்றம் சாட்டியுள்ளார்.



சென்னை கோட்டூர்புரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், தமிழ்நாட்டுக்கு கர்நாடகம் வழங்கவேண்டிய நீரில் 83 புள்ளி 6 டி.எம்.சி. பற்றாக்குறையாக உள்ளதாகவும், நேற்று முன்தினம் நடைபெற்ற காவிரி ஒழுங்காற்றுக் குழு, தனது பணியை முறையாகச் செய்யவில்லை என்றும் தெரிவித்தார்.

காவிரி விவகாரத்தில் உச்சநீதிமன்ற தீர்ப்பை மதிக்காமல், கர்நாடகா தொடர்ந்து பிடிவாத போக்குடன் செயல்படுவதாக குற்றஞ்சாட்டிய அமைச்சர் துரைமுருகன், ஒன்றிய அரசும் தனது கடமையை செய்யாமல் வேடிக்கை பார்ப்பதாக கூறினார்.

நாளை நடைபெறவுள்ள காவிரி ஆணையக் கூட்டத்தில் தமிழ்நாட்டின் உரிமை மீண்டும் வலியுறுத்தப்படும் என்றும் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவித்தார்.

தமிழ்நாடு மீனவர்களை

# இலங்கைக் கடற்படையினர் கைது செய்வதை தடுத்து நிறுத்துவீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒன்றிய இணை அமைச்சருக்குக் கடிதம்!

## டி.ஆர்.பாலு மீனவர் பிரதிநிதிகளுடன் நேரில் வலியுறுத்தல்!

**புதுடெல்லி, நவ.2-**

**தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து கைது செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்திடக்கோரி, ஒன்றிய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் வி.முரளிதரன் அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதிய கடிதத்தினை, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு அவர்கள் தலைமையிலான குழுவினர் நேரில் அளித்தனர்.**

தமிழ்நாட்டைச்சேர்ந்த மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து கைது செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்திடக் கோரியும், கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களை உடனடியாக விடுவிக்கவும், பறிமுதல் செய்யப்பட்டுள்ள மீன்பிடிப் படகுகளைத் திரும்ப வழங்கிடக் கோரியும், இப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வினை ஒன்றிய அரசு விரைந்து காண வேண்டுமென்று வலியுறுத்தியும், ஒன்றிய வெளியுறவுத் துறை இணையமைச்சர் வி.முரளிதரன் அவர்களுக்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க, நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அவர்கள் நேற்று முன்தினம் (31.10.2023) புதுடெல்லியில் ஒன்றிய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் வி.முரளிதரன் அவர்களை சந்தித்து, இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாடு மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதை தடுத்து நிறுத்தவும், பறிமுதல் செய்யப்பட்ட அவர்களது படகுகளை திரும்ப வழங்கவும் வலியுறுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எழுதிய கடிதத்தை வழங்கி வலியுறுத்தினார். இச்சந்திப்பின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி, மீனவர் சங்கங்களின் சார்பில் சேசுராஜா, என்.ஜெ.போஸ், சகாயம் ஆகியோர் உடனிருந்தனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில், தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு அவர்கள், இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் கே. நவாஸ் கனி மற்றும் இராமநாதபுரம் மாவட்ட மீனவ சங்கத்தைச் சார்ந்த என்.ஜே.போஸ், பி.சேசுராஜா, ஆர்.சகாயம் ஆகியோருடன் ஒன்றிய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் வி.முரளிதரன் அவர்களை நேற்று முன்தினம் (31.10.2023) நேரில் சந்தித்து, முதலமைச்சர் அவர்கள் எழுதிய கடிதத்தினை வழங்கினார்.

முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில், கடந்த சில மாதங்களாக இதுபோன்று தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்படும் நிகழ்வுகள் பெருமளவில் அதிகரித்து வருவதாகக் கவலைபடத் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, தமிழ்நாட்டைச் சேர்ந்த 37 மீனவர்கள் IND TN10 MM860, IND TN10 MM985, IND TN10 MM 915, IND TN10 MM717 மற்றும் IND TN10 MM717 ஆகிய பதிவு எண்களைக் கொண்ட மீன்பிடிப் படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற நிலையில், 28.10.2023 அன்று இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதோடு, அவர்களது 5 மீன்பிடிப் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நமது மீனவர்கள் தங்களது வாழ்வாதாரத்திற்கு மீன்பிடித் தொழிலை மட்டுமே நம்பியுள்ள நிலையில், அவர்கள் இதுபோன்று அடிக்கடி கைது செய்யப்படுவது மீனவ சமூகத்தினரிடையே பெரும் துயரத்தையும், அச்ச உணர்வையும் ஏற்படுத்தியிருப்பதை ஒன்றிய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார் எனக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், 2023 அக்டோபர் மாதத்தில் மட்டும் தமிழ்நாட்டைச் சேர்ந்த 64 மீனவர்கள் கைது செய்யப்பட்டு, அவர்களது 10 மீன்பிடிப் படகுகள் இலங்கைக் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கைக் கடற்படையினரால் மீனவர்கள் கைது செய்யப்படுவதும், அவர்களது மீன்பிடிப் படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்று தொடர்ந்து கோரிக்கை விடுக்கப்பட்டு வரும் நிலையில், தமிழ்நாட்டு மீனவர்கள் இதுபோன்று கைது செய்யப்படுவது தடையின்றி தொடர்வதாக வேதனையுடன் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், எவ்வித காலதாமதமுமின்றி, உரிய தூதரக நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டுமென்று தமிழ்நாட்டு மக்கள் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்வதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட அனைத்து மீனவர்களையும், மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் ஒன்றிய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் வி.முரளிதரன் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளார்.

### நடவடிக்கை எடுப்பதாக உறுதி!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதிய கடிதத்தினைப் பெற்றுக் கொண்டு, அவர்களது கோரிக்கைகளைக் கேட்டறிந்த ஒன்றிய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் வி.முரளிதரன் அவர்கள், இதுகுறித்து முதலமைச்சர் அவர்களது கடிதம் ஏற்கெனவே தங்களது துறைக்கு வந்து விட்டதாகவும், அதனடிப்படையில் உரிய நடவடிக்கை ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் டி.ஆர்.பாலு அவர்களது தலைமையிலான குழுவினரிடம் தெரிவித்துள்ளதோடு, இலங்கை அதிகாரிகளுடன் இதுதொடர்பாக ஒன்றிய அரசின் சார்பில் தொடர்ந்து பேசப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.


# மாநிலங்களைக் காப்போம்; இந்தியாவைக் காப்போம்! “இந்தியா” கூட்டணியை வெற்றிபெறச் செய்வோம்!

## “Speaking for India” பாட்காஸ்ட் 3-ல் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!... முதல் பக்கத் தொடர்ச்சி

இவர்கள் செய்வதில் மிக மோசமானது என்ன என்றால், மாநிலங்களின் கல்வி உரிமையில் தலையிட்டு, குழந்தைகளின் எதிர்காலத்தோடு விளையாடுவதுதான். ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு பண்பு இருக்கிறது - ஒரு கலாச்சாரம் இருக்கிறது - அவர்களுக்கு என்று தனிப்பட்ட சிந்தனை இருக்கிறது. இதையெல்லாம் அழிப்பதற்கான கொள்கைதான் தேசிய கல்விக் கொள்கை! இவ்வாறு பா.ஜ.க. ஆட்சி பறித்த உரிமைகளை ஒன்று ஒன்றாகப் பட்டியல் போட வேண்டும் என்றால், இன்னும் பத்து எபிசோட் பேசலாம்.



இது எல்லாவற்றில் இருந்தும் நம்மைப் பாதுகாக்க இருக்கும் ஒரே கவசம், மாநில சுயாட்சிதான்! அதனால்தான், பேரறிஞர் அண்ணாவும் – முத்தமிழறிஞர் கலைஞரும் மாநில சுயாட்சியை வலியுறுத்தினார்கள். நானும் வலியுறுத்திக்கொண்டு இருக்கிறேன். 1974-ஆம் ஆண்டு தலைவர் கலைஞர், நாட்டுக்கே முன்னோடியாக, மாநில உரிமைகளுக்கு வலுசேர்க்க இராஜமன்னார் குழு அமைத்தார்; அந்தக் குழுவின் பரிந்துரைகளைச் சட்டமன்றத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க மாநில சுயாட்சித் தீர்மானமாக நிறைவேற்றி னார். அந்த தீர்மானத்தில், முக்கிய மான சில வரிகளை மட்டும் சொல்கிறேன்...




**இராசமன்னார் குழுவின் பரிந்துரைகள் இரண்டு அவைகளிலும் நிறைவேற்றம்!**

“மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட மாநில ஆட்சிகள் தடையின்றிச் செயல்படவும், மாநில சுயாட்சி பற்றியும் இராசமன்னார் குழுவின் பரிந்துரைகள் மீதும் தமிழ்நாடு அரசு அளித்திருக்கும் கருத்துரைகளை மத்திய அரசு ஏற்று, மத்தியில் கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி கொண்ட உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்கும் அடிப்படையில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டும் என்று இப்பேரவை முடிவு செய்கிறது”. இந்த தீர்மானத்தைத் தமிழ்நாட்டில் அப்போது இருந்த இரண்டு அவைகளிலும் நிறைவேற்றினார்.


இவ்வாறு நிறைவேற்றி அனுப்பிய தீர்மானத்தைத்தான், அன்றைய பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்களும், “These are important issues and we intend to consult all the Chief Ministers” என்று சொன்னார். தலைவர் கலைஞர் தி.மு.க. வின் கொள்கைகளை ஐம்பெரும் முழக்கங்களாகச் சொன்னார். அதில் ஐந்தாவது முழக்கம், “மத்தியில் கூட்டாட்சி! மாநிலத்தில் சுயாட்சி!”

இந்தக் குரலைத் தெற்கில் மட்டுமல்ல, வடக்கில் காஷ்மீரத்துச் சிங்கம் ஷேக் அப்துல்லா – கிழக்கில் வங்கத்தில் பொதுவுடைமைத் தோழர், ஜோதி பாசு ஆகியோரும் எதிரொலித்தார்கள்.

இன்றைக்கு ஒன்றியத்தின் ஆட்சிப் பொறுப்பின் கடைசிக் கட்டத்தில் இருக்கும் பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். விரும்பும், சர்வாதிகாரம் கொண்ட ஆட்சியை உருவாக்க நினைக்கிறது!. அதனால்தான் அவர்கள் அரசியல் சட்டப்படியும் ஆட்சி நடத்தவில்லை; மாநிலங்களையும் மதிக்கவில்லை!




மாநிலங்களைச் செயல்படவிடாத ஒன்றிய அரசு, மாநில அரசின் சம்பளத்தைப் பெற்று மாநில நலனுக்கு எதிராக செயல்படுகிற ஆளுநர்கள், இவர்களை வைத்துக் கொண்டே எண்ணற்ற மக்கள்நலத் திட்டங்களை எதிர்க்கட்சி ஆளுகிற மாநிலங்களால் செய்ய முடிகிறது என்றால், கூட்டாட்சி நெறிமுறைகளை மதிக்கும் ஒரு ஆட்சி, ஒன்றியத்தில் அமைந்தால், எல்லா மாநிலங்களும் மேலும் செழிக்கும்.




**மாநில சுயாட்சி வெல்ல**
**“இந்தியா” கூட்டணி ஆட்சிக்கு வர வேண்டும்!**

மாநில சுயாட்சி என்ற கொள்கை வெல்ல வேண்டும் என்றால், இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வர வேண்டும். அதற்கு மக்கள் தயாராக வேண்டும். வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக, மினி நாடாளுமன்றத் தேர்தலாகப் பார்க்கப்படும் ஐந்து மாநில சட்டமன்றத் தேர்தல்கள் நடக்க இருக்கிறது. அதில் வாக்களிக்கப் போகும் வாக்காளப் பெருமக்களும் இதை மனதில் வைத்து வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிறைவாக, இந்த எபிசோடைக் கேட்ட உங்களிடம் உரிமையோடு நான் கேட்பது, **இந்தியா கூட்டணியின் கையில், இந்தியாவை ஒப்படையுங்கள். மாநிலங்களைக் காப்போம்! இந்தியாவைக் காப்போம்! இந்தியா கூட்டணியை வெற்றி பெற வைப்போம்!**

இவ்வாறு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

---

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை தெற்கு ஒன்றியம்

## நாகனி ரவி இல்ல திருமணம்!

### அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன் - எஸ்.ரகுபதி - அரசியல் கட்சியினர் வாழ்த்து!

சிவகங்கை, நவ.2-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை தெற்கு ஒன்றிய செயலாளர் நாகனி ஆர். ரவி திருமதி ஆர்.ஜோதி ரவி, சகோதரர் ஆர்.போஸ் திருமதி. தேன்மொழி மகள் பிரியதர்ஷினிக்கும் தேவகோட்டை தாலுகா மேல உச்சாணி கிராமத்தைச் சேர்ந்த ஆர். செல்லமுத்து - திருமதி ஜெயா ஆகியோரது மகன் கற்பூரசுந்தர பாண்டியன் என்ற விஜய் ஆகியோரின் திருமணம் தேவகோட்டை ராம் நகர் தாய் மஹாலில் மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவு அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் நடைபெற்றது.

திருமணத்தினை கே.ஆர். பெரிய கருப்பன் அவரது மனைவி திருமதி. பிரேமா பெரியகருப்பன் ஆகியோர் நடத்தி வைத்தார்கள்.

மணமக்களை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, முன்னாள் அமைச்சர் மு. தென்னவன், எம்.எல்.ஏக்கள், எஸ். மாங்குடி, கரி.மாணிக்கம், முன்னாள் எம்.எல்.ஏக்கள் கே.ஆர். ராமசாமி, சுப.மதியரசன், எஸ். மாரியப்பன் கென்னடி, எஸ். முத்து துரை, என்.குணசேகரன், அ.கணேசன், த.சேங்கை மாறன், திருமதி ஜோன்ஸ்ருசோ, தா. ராமையா, மதார்சேட், பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, கரு.அசோகன், அம்பலமுத்து, பூபால சிங்கம், ரவிச்சந்திரன், நா.நெடுஞ்செழியன், குன்னக்குடி சுப்பிரமணியன், யோக கிருஷ்ண குமார், கே.பாலசுப்பிரமணியன், எஸ்.சண்முகவடிவேலு, பெரி. பாலா, துரை ஆனந்த், க. பொன்னுச்சாமி, நாகனி செந்தில் குமார், அழகையா மற்றும் பலர் வாழ்த்தினர்.



தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (31.10.2023) உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தலைமையில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறைத் தலைமை அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், டாக்டர் கே. கோபால், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் ஹர் சஹாய் மீனா, தமிழ்நாடு நுகர்பொருள்வாணிபக் கழக நிர்வாக இயக்கு னர் ஆ.அண்ணாதுரை, தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிர்வாக இயக்குநர் எஸ். பழனிசாமி, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அரசு துணைச் செயலாளர் து.மோகன்ராஜ், குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு காவல்துறைத் தலைவர் க. ஜோஷி நிர்மல் குமார், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு கூடுதல் செயலாளர் பி.கே. இராமச்சந்திரன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## திருவாரூரில் நெசவாளர் அணி கிழக்கு மண்டல ஆலோசனைக் கூட்டம்!

### அமைச்சர் க.பொன்முடி - மாநில செயலாளர் நன்னியூர் ராஜேந்திரன் பங்கேற்பு!

*திருவாரூர், நவ.2 -*

*திருவாரூரில் தி.மு.கழக நெசவாளர் அணியின் கிழக்கு மண்டல நிர்வாகிகளின் ஆலோசனைக்கூட்டம் காட்டூர் கலைஞர் கோட்டத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் கழக துணைப்பொதுச் செயலாளர் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, கழக அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ். பாரதி, மாநில நெசவாளர் அணி செயலாளர் நன்னியூர் ராஜேந்திரன், மாவட்டச் செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி. பாலு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.*


*தி.மு.க. நெசவாளர் அணியின் கிழக்கு மண்டல ஆலோசனை கூட்டம், திருவாரூர் கலைஞர் கோட்டத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாநில நெசவாளர் அணி துணைத்தலைவர் ஒ.ஏ.நாகலிங்கம், மாநில செயலாளர் காஞ்சி தி.அன்பழகன், மாநில செயலாளர்கள் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், க.பழனிச்சாமி, பரணி.கே.மணி, நெல்லை சே.பெருமாள், கே.எம்.நாகராஜன், சிந்து.ரவிச்சந்திரன்,துணை செயலாளர்கள் வசந்தம் ஜெயக்குமார், ஜி.வி.மணிமாறன், ஆ.ராமசாமி, கோவிந்தசாமி ஆகியோர் முன்னிலை ஏற்றனர்.*

*கூட்டத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி, மாவட்டச் செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ., மாநில நெசவாளர் அணி செயலாளர் நன்னியூர் ராஜேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.*

*கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பிக்கும் வகையில் நெசவாளர் உற்பத்திப்பொருட்களின் சிறப்பு கண்காட்சியை கும்பகோணத்தில் நவம்பர் 7ம் தேதி நடத்துவது, அதில் கழக ஆட்சியில் நெசவாளர்கள் அடைந்த மேன்மைகளை எடுத்து கூறும்விதமாக காணொளி காட்சிகளை நடத்துவது ,*

*நெசவாளர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் அவர்களின் வாழ்வு மேலும் மேம்படும வகையில் விழிப்புணர்வு முகாம்களை நடத்துவது, முதலில் இந்த முகாமை ஜெயங்கொண்டம் அல்லது கடலூர் பகுதிகளில் நடத்தி கழக சொற்பொழிவாளர்களை கொண்டு பிரச்சாரங்களை மேற்கொள்வது, தமிழ்நாடு மாணவர்களின் மேற்படிப்பு கனவுகளை மெய்ப்பிக்கும் வகையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் இளைஞர்களின் எதிர்காலம் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்பில் நடைபெறும் நீட் விலக்கு அதுவே நம் இலக்கு எனும் மாபெரும் கையெழுத்து இயக்கத்திற்கு நெசவாளர் அணி நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு, நெசவாளர் அணி அந்தந்த பகுதிகளில் உள்ள இளைஞர் அணி, மாணவர் அணி மற்றும் மருத்துவர் அணியோடு இணைந்து கையெழுத்து இயக்கத்தை வெற்றிகரமாக நடத்துவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.*

*திருவாரூர் மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் பி.சுதந்திரமணி ,தஞ்சை மாவட்ட அமைப்பாளர் டி.ஆர்.அனந்தராமன் ஆகியோர் நன்றி கூறினர்.*



## தனியார் பங்களிப்புடன் தமிழ்நாட்டில் உள்ள துறைமுகங்கள் மேம்படுத்தப்படும் - 22 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பளிக்கும் வகையில்

# தமிழ்நாட்டில் - ரூ.7,108 கோடியில் 8 புதிய தொழிற்சாலைகள்!

## முதல்வர் தலைமையிலான அமைச்சரவைக் கூட்ட முடிவுகளை விளக்கி - நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டி!

**சென்னை, நவ.2 -**

**சென்னை - தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. இதில் பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து நிதியமைச்சர் தங்கம் தென்னரசு செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தார்.**

**தமிழ்நாட்டில் கடந்த 2 ஆண்டுகளில் தொழில் வளர்ச்சி தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும், ஏற்கனவே தொழில் நடத்தும் நிறுவனங்கள், புதிதாக தொழிற்சாலைகளை தொடங்கவும், விரிவாக்கம் செய்யவும் தமிழ்நாடு அரசின் ஒப்புதலை கேட்டிருந்ததாகவும், இக்கோரிக்கையைப் பரிசீலித்து, 7 ஆயிரத்து 108 கோடி ரூபாய் முதலீட்டில் 8 புதிய தொழிற்சாலைகள் அமைக்க அமைச்சரவை அனுமதி அளித்துள்ளதாகவும், இதன் மூலம் 22 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.**

நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று முன்தினம் (31.10.2023) தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. அமைச்சரவையில் பல்வேறு பொருண்மைகள் குறித்து விவாதிக்கப்பட்டு முடிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. குறிப்பாக உங்கள் அனைவருக்கும் தெரியும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற இந்த இரண்டரை ஆண்டு காலத்தில் தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சி மிகப் பெரிய அளவிலே இன்றைக்கு நடைபெற்றிருக்கிறது. பல்வேறு நிறுவனங்கள் போட்டி போட்டுக்கொண்டு தமிழ்நாட்டில் தங்களுடைய முதலீடுகளைச் செய்வதற்கு மிகுந்த ஆர்வமாக இருக்கிறார்கள். அந்த வரிசையில் புதிய தொழில் நிறுவனங்கள் - ஏற்கனவே தமிழ்நாட்டிலே தங்களுடைய தொழிற்சாலைகளை நிறுவி இருக்கக் கூடிய நிறுவனங்களும், தங்களுடைய புதிய முதலீடுகளை தமிழ்நாட்டில் உருவாக்குவதற்கு, அவர்கள் அரசுக்கு உரிய முன்முடிவுகளை அளித்து அவர்களுக்கான அமைப்பு முறைகளுக்கான அந்த தொகுப்புச் சலுகைகளை வழங்குவது தொடர்பாக இன்று அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கிறது.

### தொகுப்புச் சலுகைகள்!

ஏறத்தாழ 8 நிறுவனங்கள் அதற்கான அமைப்பு முறையிலான அந்த தொகுப்புச் சலுகைகளைப் பெறுவதற்கும், ஏற்கனவே, இங்கே இருக்கக்கூடிய தங்களுடைய தொழிற்சாலைகளில் விரிவாக்க நடவடிக்கைகளுக்கும் சலுகைகளை அமைப்பு முறையில் அவர்கள் பெறுவதற்கும் அவர்களுடைய கருத்துருக்கள் ஆய்வு செய்யப்பட்டு இன்றைக்கு அனுமதி வழங்கப்பட்டிருக் கிறது. இதன் வாயிலாக, தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்கள் - குறிப்பாக, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, ராணிப்பேட்டை, கோயம்புத்தூர் போன்று இருக்கக் கூடிய மாவட்டங்களில் ஏறத்தாழ 7108 கோடி ரூபாய் முதலீடுகளில் சுமார் 22 ஆயிரத்து 536 நபர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கக்கூடிய திட்டங்களுக்கு இன்றைய அமைச்சரவையில் நமது அமைப்பு முறையிலான இந்த தொகுப்புச் சலுகைகள் இந்த நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

இந்தத் தொழிற்சாலைகள் குறிப்பாக மின்சார வாகன பாகங்கள், காலணி உற்பத்தி, விண்வெளி மற்றும் பாதுகாப்புப் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், ஆராய்ச்சி மேம்பாடு போன்று இருக்கக்கூடிய துறைகளில் இவர்கள் முதலீடுகளைச் செய்ய இருக்கிறார்கள்.

அடுத்ததாக, தமிழ்நாட்டில் புதிதாக, 'தமிழ்நாடு மாநில துறைமுக மேம்பாட்டுக் கொள்கை - 2023', அமைச்சரவையின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டு, அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் தரப்பட்டிருக்கிறது. இதில் முக்கியமாக நாம் பார்க்க வேண்டியது. நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல தமிழ்நாடு தொழில் துறை



யில் மிக முக்கியமான முன்னணி மாநிலமாக இருக்கிறது. முன்னணி மாநிலமான தமிழ்நாட்டின் கடற்கரை நீண்டு பரந்து விரிந்திருக்கக் கூடிய ஒரு கடற்கரை. ஏறத்தாழ 1076 கி.மீட்டர் நீளமுடைய மிக நீளமான கடற்கரையை நாம் பெற்றிருக்கிறோம். அதில் பல்வேறு பெரிய துறைமுகங்கள், சிறு துறைமுகங்கள் என்று இருக்கின்றன. நான்கு பெரிய துறை முகங்கள் இருக்கின்றன. 17 சிறிய துறைமுகங்கள் இருக்கின்றன.

### துறைமுகக் கட்டமைப்பு!

நம்முடைய தொழில் வளர்ச்சிக்கு ஒரு சிறந்த துறைமுகக் கட்டமைப்புக்கு நமக்கு இன்றைக்குத் தேவையாக இருக்கிறது என்பதை

## "மாநில துறைமுக மேம்பாட்டுக் கொள்கை 2023"-க்கு அமைச்சரவை ஒப்புதல்!

நாம் அறிவோம். எனவே இவற்றை மனதில் கொண்டு 'தமிழ்நாடு மாநில துறைமுக மேம்பாட்டுத் கொள்கை - 2023' இப்போது வடிவமைக்கப்பட்டிருக் கிறது. ஏற்கனவே இருந்த கொள்கை 2007ஆம் ஆண்டில் 'தமிழ்நாடு சிறு துறைமுகங்கள் மேம்பாட்டுக் கொள்கை' என்ற அளவில் இருந்தது. இப்போது அது சிறு துறைமுகங்கள் அளவில் இல்லை. நம்முடைய துறைமுகங்கள் எல்லாம் பெரிய அளவில் வளர்ச்சி பெறவேண்டும் என்ற நோக்கில், இப்போது அந்தக் கொள்கை மொத்தமாக 'தமிழ்நாடு மாநில துறைமுக மேம்பாட்டுக் கொள்கை'யாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

கடந்த 16 வருடங்களாக நாம் பார்த்தோம் என்று சொன்னால், இந்த கடல்சார் வணிகத்தில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக பல்வேறு மாநிலங்களிடையே பெரிய போட்டிகள் ஏற்படுகிறது. நமக்கு அண்டை மாநிலத்தில் இருக்கக் கூடிய ஆந்திரப் பிரதேசத்திலும் கூட அங்கே இருக்கக்கூடிய கடற்கரைகளில் உள்ள துறைமுகங்களை விரிவுபடுத்துவதற்கு முதலீடுகளைச் செய்வதற்கு முன் பெரிய போட்டியிருக்கிறது. அதன் வாயிலாக ஏற்பட்டிருக்கக் கூடிய இந்த வளர்ச்சியில் தனியார் துறையின் முதலீட்டை ஈர்க்கக்கூடிய வகையில் இத்தகைய துறைமுக துறைமுக மேம்பாட்டுக் கொள்கை உருவாக்கப்படுவது அவசியமாக இருக்கிறது. இதனை ஒட்டி - மகாராஷ்டிரம், ஆந்திரப் பிரதேசம், ஒரிசா போன்ற மாநிலங்களில் இப்போது நடைமுறையில் இருக்கக்கூடிய கொள்கைகளை முழுமையாக நாம் ஆய்வு செய்து, அந்தக் கொள்கையில் இருக்கக்கூடிய கூறுகளை உள்வாங்கிக் கொண்டு இப்போது இருக்கக்கூடிய போட்டித் தன்மைகளை எதிர்கொண்டு, தமிழ்நாட்டில் துறைமுகக் கட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்காக நாம் இப்போது இந்தக் கொள்கையை உருவாக்கி இருக் கிறோம். இதில் பல விஷயங்களை நாம் எடுத்திருக்கிறோம்.

கப்பல் மறு சுழற்சி உருவாக்கக்கூடிய வசதிகள், மிதவைக் களங்கள் கட்டுதல், துறைமுகங்களை மேம்படுத்துதல், அதைப் போல வணிக ரீதியாக சாத்தியமாகக்கூடிய விஷயங்கள், அதற்குரிய அனுமதிகள், எந்த வகையில் நாம் நெறிமுறைப்படுத்துவோம் என்பதை எல்லாம் வியாபாரத்தை எளிதாக்குதல், இவற்றையெல்லாம் உள்ளடக்கி இருக்கக்கூடியதாக இந்தக் கொள்கையை நாம் உருவாக்கி இருக்கிறோம்.

### கடல் புறம்போக்கு!

ஆழ்கடல் துறைமுகங்களின் வளர்ச்சிக்கு பெரிய கப்பல்களை நிறுத்தக் கூடிய வகையிலும், அதற்கு மிகப்பெரிய முதலீடுகள் நமக்குத் தேவைப்படுகிறது, இந்தத் துறைமுகங்களை உருவாக்குவதில் பெரிய அளவில் நாம் கொண்டு வந்தால்தான் தனியாருடைய முதலீடுகள் வரக்கூடிய சூழ்நிலைகள் இருக்கிறது. எனவே இதை, 'கடல் புறம்போக்கு' என்கின்ற நாம் நீண்டகாலக் குத்தகைக்கு விடுவதற்கும் இந்தக் கொள்கை வழிவகை செய்திருக்கிறது.

அதுமாத்திரமல்ல, நீர் விளையாட்டுக்கள் (water games) போன்ற சவாலான விளையாட்டுக்கள், சுற்றுச்சூழல் சவால்கள் இருக்கக்கூடிய அதாவது பசுமை துறைமுகத் திட்டங்கள் ஆகிய கொள்கையும் உள்ளடக்கி இந்த நிலையான ஒரு கடல்சார் வளர்ச்சி (sustainable development) அதையெல்லாம் உள்ளடக்கி இருக்கக்கூடிய கூறுகளைக் கொண்டதாக இந்தக் கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த அமைச்சரவைக் கூட்டத்தில், அமைச்சரவை ஒப்புதலுக்கு வைக்கப்பட்டு, அமைச்சரவையும் இந்த ஒப்புதலை கொடுத்திருக்கிறது.

### பத்திரிக்கையாளர்களுக்கு நிலம் ஒதுக்கிட முடிவு!

அடுத்து மிக முக்கியமாக, திருச்சி மற்றும் சேலம் மாவட்டங்களில் பத்திரிக்கையாளர்களுக்கு நிலம் வழங்குவது சம்பந்தமாக அமைச்சரவையில் மிக முக்கியமாக ஒரு முடிவு எடுத்திருக்கிறோம். அதை இந்தப் பத்திரிக்கையாளர் சந்திப்பில் நான் சொல்வதில் மிகுந்த மகிழ்ச்சியைப் பெறுகிறேன்.

ஏற்கனவே திருச்சியில் நீண்ட நெடுங்காலமாக இது நிலுவையில் இருந்தது நீங்களும் அறிந்திருப்பீர்கள். திருச்சி மாவட்டத்தில் இருக்கக்கூடிய மாவட்ட செய்தியாளர் சங்க உறுப்பினர்களுக்கு, முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த கால கட்டத்தில் அவர்களுக்கு அங்கே நிலம் வழங்குவதற்கு அதற்கான ஒரு முடிவு எடுக்கப்பட்டு, அதற்கு ஒரு சிறப்பு நேர்வாக சதுர அடி ஒன்றுக்கு 25 ரூபாய் என்று அது நில மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதற்கப்புறம் 2008ல் இது அமைச்சரவைக் கூட்டத்திலேயே இது கலந்து பேசப்பட்டு அதற்கான ஆணைகளும் வெளியிடப்பட்டது. அதைத் தொடர்ந்து 57 பத்திரிகையாளர்களுக்கு அரசு கணக்கிலே அவர்களுக்கு நிர்ணயிக்கப் பட்டதை ஏற்கனவே அவர்களும் அதைச் செலுத்தியிருந்தார்கள்.

ஆனால் அதற்குப் பிறகு தனி நபர் ஒருவர் உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்கு ஒன்றினைத் தொடுத்து அந்த நில ஒதுக்கீடு சம்பந்தமாக அந்த வழக்கு இருந்த காரணத்தினால் அந்த ஒதுக்கீட்டை பத்திரிகையாளருக்குக் கொடுக்க முடியாத ஒரு நிலை இருந்தது. பல ஆண்டுகாலமாக இந்தப் பிரச்சினை இருந்தது.

முதலமைச்சர் அவர்கள் திருச்சி செல்லும் போது மற்ற சமயங்களில் நம்முடைய பத்திரிக்கையாளர் நண்பர்கள் அவரிடத்தில் தொடர்ந்து எடுத்துச் சென்று இப்போது முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின் பேரில் அவர்கள் அனைவருக்கும் நிலம் வேறு ஒரு இடத்தில் வழங்குவதற்கு அந்த இடம் கண்டறியப்பட்டு அவர்களுக்கு அந்த நிலங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இன்றைய அமைச்சரவையில் அதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது.

அதேபோல, சேலம் மாவட்டத்தில் இருக்கக்கூடிய பத்திரிகையாளர்களுக்கு கொண்டப்ப நாயக்கன்பட்டி கிராமத்தில் நிலத்தினை வகைப்பாடு செய்து வழங்கிட இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப் பட்டது. நிலத்தை மொத்தமாக வகைப்பாடு செய்து அங்கேயும் அந்த நிலத்தைக் கொடுப்பதில் ஏறத்தாழ 34 நிருபர்களுக்கு 2008ஆம் ஆண்டில் வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்படும் நிலையில், அதை எதிர்த்து நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

அவர்களுக்கு மாற்று இடம் வழங்குவதற்கு நீதிமன்றம் தெரிவித்ததைத் தொடர்ந்து இந்தப் பிரச்சினை நீண்ட காலமாக நிலுவையில் இருந்து வந்தது. பத்திரிகையாளர்கள் தங்களுக்கு ஒரு மாற்று இடத்தைத் தந்திடவேண்டும் என்று முதலமைச்சர் அவர்களிடத்தில் கோரிக்கை வைத்துள்ள நிலையில் இப்போது மாற்று நிலம் கண்டறியப்பட்டு அவர்களுக்கும், இப்போது அந்த நிலம் வழங்கப்பட்டு அமைச்சரவையில் அதற்கான முடிவும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இவ்வாறு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டியின் போது குறிப்பிட்டார்.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (31.10.2023) வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் சம்பா சாகுபடி தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, வேளாண்மைத் துறை ஆணையர் முனைவர். எல். சுப்ரமணியன், வேளாண்மை கூடுதல் இயக்குநர் திருமதி. ஸ்ரேயா பி. சிங், தலைமைப் பொறியாளர் (வே.பொ.) ஆர். முருகேசன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு!

# திருவண்ணாமலை மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## கழகத்தினருக்கு அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை!

திருவண்ணாமலை, நவ.2-

வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் திருவண்ணாமலை மாவட்ட கழகத்தினர் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு விடுபட்ட மற்றும் புதிய வாக்காளர்களை சேர்த்திட வேண்டுமென பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில்..

01.01.2024 தேதியை தகுதியேற்படுத்தும் நாளாக கொண்டு வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் 27.10.2023 அன்று வெளியிட்டுள்ளது. 27.10.2023 முதல் 09.12.2023 வரை புதிய வாக்காளர்களை சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும், திருத்தம் செய்யவும் மனு செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இது தவிர 04.11.2023 (சனிக்கிழமை), 05.11.2023 (ஞாயிற்றுக்கிழமை), 18.11.2023 (சனிக்கிழமை), 19.11.2023 (ஞாயிற்றுக் கிழமை) ஆகிய நான்கு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட மையங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளன.

இந்நாட்களில் விடு



பட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும் 01.01.2024 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து அந்த படிவங்களை அந்தந்த முகாம்களில் கொடுக்க வேண்டும்.

17வயது நிரம்பிய வர்களும், உரிய ஆவணங்களோடு விண்ணப்பிக்கலாம். அவர்கள் 18வயது நிரம்பும்போது வாக்காளர் பட்டியலில் இடம் பெற இந்திய தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்திருக்கிறது.

இதன் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும் புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும். தொகு தியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள மேற்கண்ட அட்டவணையின்படி சிறப்பு முகாம்கள் நடைபெறவிருக்கும் நாட்களில், நமது மாவட்டத்தில் உள்ள திருவண்ணாமலை, கீழ்பென்னாத்தூர், செங்கம் கலசப்பாக்கம், போளூர், ஆரணி, செய்யாறு, வந்தவாசி தொகுதிக்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக செயலாளர் நிர்வாகிகள் மற்றும் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA-2) ஆகியோர் தங்களை முழுமையாக ஈடுபடுத்திட கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு அறிக்கையில் கூறியுள்ளார்.

## கடலூர் கிழக்கு மாவட்டத்தில்

# ஒன்றியம், நகரம், பேரூர் வாரியாக வாக்காளர் சேர்ப்பு பணிக்கு வாக்குச் சாவடி நிலைக்குழு முகவர்கள் தொடர் கூட்டம்!

**மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!**



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணையின்படி, கடலூர் கிழக்கு மாவட்டம், சட்டமன்ற தொகுதிக்குப்பட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் வாரியாக வாக்காளர் சேர்ப்பு பணிக்கு வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2) கூட்டங்கள் நடைபெற்று வருகிறது. அதன் தொடர்ச்சியாக கீழ்க்கண்ட பட்டியலில் உள்ளவாறு வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் கூட்டம் நடைபெறும். அதுசமயம் சம்மந்தப்பட்ட பகுதிகளின் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (Blc) அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

| நாள் | நேரம் | ஒன்றியம்/ நகரம்/ பேரூர் | நடைபெறும் இடம் கூட்டம் | தொகுதி பார்வையாளர் |
|---|---|---|---|---|
| **குறிஞ்சிப்பாடி சட்டமன்ற தொகுதி** | | | | |
| 03.11.2023 | காலை 10 மணி முதல் | கடலூர் மேற்கு ஒன்றியம் | 10 ஊராட்சியிலுள்ள அந்தந்த பாக பகுதிகளில் | **ச.அ.பெருநற்கிள்ளி,** துணைச் செயலாளர், கொள்கைப் பரப்புக்குழு |
| 06.11.2023 | காலை 10 மணி | வடலூர் நகரம் | மங்கையர்க்கரசி திருமண மண்டபம்,வடலூர் | |
| 07.11.2023 | காலை 10 மணி முதல் | குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றியம் | ஊராட்சி வாரியாக நடைபெற்ற பாக முகவர்கள் கூட்டங்களில் விடுபட்ட பகுதிகள் | |
| 08.11.2023 | காலை 10 மணி முதல் | குறிஞ்சிப்பாடி வடக்கு ஒன்றியம் | ஊராட்சி வாரியாக நடைபெற்ற பாக முகவர்கள் கூட்டங்களில் விடுபட்ட பகுதிகள் | |
| **கடலூர் சட்டமன்ற தொகுதி** | | | | |
| 03.11.2023 | மாலை 3 மணி | கடலூர் வடக்கு ஒன்றியம் | ஓம் சக்தி மஹால் நல்லாதூர் | **திருமதி.ஏ.அங்கயற்கன்னி,** Ex MLA. கழக மாநில மகளிரணி துணைச் செயலாளர் |
| 03.11.2023 | மாலை 5 மணி | கடலூர் தெற்கு ஒன்றியம் | ராணி பார்ட்டிமஹால் பாதிரிக்குப்பம் | |
| **காட்டுமன்னார்கோவில் சட்டமன்ற தொகுதி** | | | | |
| 01.11.2023 | மாலை 5 மணி | திருமுட்டம் கிழக்கு ஒன்றியம் திருமுட்டம் பேரூர் | கிரீன் பார்க் திருமண மண்டபம் | **எம்.கே.சிவா,** துணைச் செயலாளர், கழக தகவல் தொழில்நுட்ப அணி |
| 02.11.2023 | மாலை 5 மணி | காட்டுமன்னார்கோவில் மேற்கு ஒன்றியம் காட்டுமன்னார்கோவில் கிழக்கு ஒன்றியம் காட்டுமன்னார்கோவில் பேரூர் | கழக அலுவலகம், காட்டுமன்னார்கோவில் | |
| 3.11.2023 | காலை 10 மணி | திருமுட்டம் மேற்கு ஒன்றியம் | ஆனந்தா திருமண மண்டபம், திருமுட்டம் | |
| **புவனகிரி சட்டமன்ற தொகுதி** | | | | |
| 02.11.2023 | காலை 10 மணி | புவனகிரி கிழக்கு ஒன்றியம் புவனகிரி மேற்கு ஒன்றியம் புவனகிரி பேரூர் சேத்தியாதோப்பு பேரூர் | மூகாம்பிகை திருமண மண்டபம், புவனகிரி | **ஆர்.சேதுநாதன்,** தீர்மானக்குழு உறுப்பினர் |
| 02.11.2023 | மாலை 3 மணி | கீரப்பாளையம் கிழக்கு ஒன்றியம் கீரப்பாளையம் மேற்கு ஒன்றியம் | ஆதிலட்சுமி திருமணமண்டபம், கீரப்பாளையம் | |
| 03.11.2023 | காலை 11 மணி | கம்மாபுரம் தெற்கு ஒன்றியம் திருமுட்டம் வடக்கு ஒன்றியம் | பாலாஜி திருமண மண்டபம், கம்மாபுரம். | |
| 03.11.2023 | மாலை 4 மணி | கம்மாபுரம் வடக்கு ஒன்றியம் கம்மாபுரம் மத்தியம் கெங்கைகொண்டான் பேரூர் | கழக அலுவலகம், அரசக்குழி | |
| **சிதம்பரம் சட்டமன்ற தொகுதி** | | | | |
| 01.11.2023 | மதியம் 3 மணி | பரங்கிப்பேட்டை வடக்கு ஒன்றியம் பரங்கிப்பேட்டை பேரூர் கிள்ளை பேரூர் | ஹபிப் தோட்டம் பரங்கிப்பேட்டை பேரூர் | **வேப்பூர் வி.எஸ். பெரியசாமி,** துணைச் செயலாளர், வர்த்தகர் அணி |
| 01.11.2023 | மதியம் 5 மணி | பரங்கிப்பேட்டை தெற்கு ஒன்றியம் | JA மஹால் பள்ளிப்படை | |
| 02.11.2023 | மாலை 4 மணி | குமராட்சி கிழக்கு ஒன்றியம் அண்ணாமலைநகர் பேரூர் | அபிராமி திருமண மண்டபம், உசுப்பூர் | |
| 03.11.2023 | காலை 10 மணி | குமராட்சி மத்திய ஒன்றியம் | ராதாகண்ணன் திருமண மண்டபம், வல்லம்படுகை. | |
| | மதியம் 12 மணி | புவனகிரி கிழக்கு ஒன்றியம் | PSK மண்டபம் (மண்டபம்) | |
| | மாலை 5 மணி | சிதம்பரம் நகரம் | 63 நாயன்மார்கள் மண்டபம், தெற்கு வீதி | |

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டம் மாநகரம் பெரியசேமூர் பகுதி கழகம் மற்றும் நந்தா மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சார்பில் மாவட்டக் கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி அறிவுறுத்தலின்படி பல்வேறு நோய்களுக்கு சிகிச்சையளிக்கும் மாபெரும் மருத்துவ முகாமினை பகுதி கழக செயலாளரும், துணை மேயருமான வி.செல்வராஜ் தலைமையில் மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம் துவக்கி வைத்தார். நிகழ்வில் மாவட்டக் கழக பொருளாளரும், மண்டல தலைவருமான ப.க.பழனிசாமி, மாநகர அவைத் தலைவர் இரா.சேகரன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பெரியசேமூர் பகுதி கழக நிர்வாகிகள் மற்றும் வட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### போர்ச்சுகல் நாட்டில் 'வாகோ உலக கிக் பாக்சிங்' - இந்தியா சார்பில் கலந்து கொள்ளும்

# தமிழ்நாட்டைச் சேர்ந்த 8 வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.12 லட்சம் நிதி!

### தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, நவ. 2 -

இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 2023 நவம்பர் மாதம் போர்ச்சுக்கல் நாட்டில் நடைபெற உள்ள வாகோ உலக கிக்பாக்சிங் (சீனியர் & மாஸ்டர்) போட்டியில் இந்தியா சார்பில் கலந்து கொள்ள உள்ள தமிழ்நாட்டைச் சார்ந்த 8 வீரர் வீராங்கனைகளுக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் ரூபாய் 12 இலட்சம் நிதியுதவியினை வழங்கினார்.அதன் விபரம் வருமாறு :-

இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 2023 நவம்பர் மாதம் போர்ச்சுக்கல் நாட்டில் நடைபெற உள்ள வாகோ உலக கிக்பாக்சிங் (சீனியர் & மாஸ்டர்) போட்டியில் இந்தியா சார்பில் கலந்து கொள்ள உள்ள தமிழ்நாட்டைச் சார்ந்த 8 வீரர் வீராங்கனைகளுக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் ரூபாய் 12 இலட்சம் நிதியுதவியினை நேற்று முன்தினம் (31.10.2023) சென்னை முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.

2023 ஆம் ஆண்டு நவம்பர் 17ஆம் தேதி முதல் நவம்பர் 26ஆம் தேதி வரை போர்ச்சுக்கல் நாட்டில் உள்ள அல்புஃபீரா நகரில் வாகோ உலக கிக்பாக்சிங் (சீனியர் & மாஸ்டர்) போட்டி நடைபெறுகிறது. இந்தப் போட்டியில் சென்னையைச் சேர்ந்த வசீகரன் (79 கிலோவிற்கு உட்பட்ட பிரிவு), சுப்ரஜா (55 கிலோவிற்கு உட்பட்ட பிரிவு), பார்த்திபன் (57 கிலோவிற்கு உட்பட்ட பிரிவு), கோகுல கிருஷ்ணன் (63 கிலோவிற்கு உட்பட்ட பிரிவு ), காஞ்சிபுரத்தைச் சேர்ந்த சரத்ராஜ் (74 கிலோவிற்கு உட்பட்ட பிரிவு), ரோஷினி (55 கிலோவிற்கு உட்பட்ட பிரிவு), நீனா (50 மற்றும் 55 கிலோவிற்கு உட்பட்ட பிரிவு), திருவள்ளூரைச் சேர்ந்த சிலம்பரசன் (FORMSபடைப்பு வடிவ பிரிவு) ஆகிய 8 வீரர்வீராங்க னைகள் சீனியர் பிரிவிலும், சென்னையைச் சேர்ந்த வினோத்குமார் மாஸ்டர் பிரிவிலும் மற்றும் இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளர் சுரேஷ் பாபுவும் பங்கேற்க உள்ளனர்.

இதில் சீனியர் பிரிவில் பங்கேற்க உள்ள 8 வீரர் வீராங்கனைகளுக்கு விமானக் கட்டணம், தங்குமிட செலவினம் மற்றும் போட்டிக்கான நுழைவுக் கட்டணமாக ரூபாய் 1.50 இலட்சம் வீதம் ரூபாய் 12 இலட்சத்திற்கான காசோலையினை தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியில் இருந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி, சங்க நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில்

# மக்கள் நல்வாழ்வுத் துறை - கோவை கங்கா மருத்துவமனையிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்!

சென்னை, நவ.2 -

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் நேற்று முன்தினம் (31.10.2023), சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள, தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கும் கோயம்புத்தூர் கங்கா மருத்துவமனைக்கும் இடையே, பாத மருத்துவம் நீரழிவு நோய் அறுவை சிகிச்சை சேவை களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது;

**பாத மருத்துவம் நீரழிவு நோய்!**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் சட்டமன்றத்தில் ஒரு அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி, தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள தாலுக்கா மருத்துவமனைகளில் நீரிழிவு நோய் மற்றும் குருதிநாள பாதிப்புகளால் ஏற்படும் கால் பாத பாதிப்புக்களை கண்டறிந்து ஆரம்ப நிலையில் கால் இழப்புக்களை குறைக்கும் திட்டம் (Foot Clinic / Stop Amputation) ரூபாய் 1.05 கோடி செலவில் செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பு, 03.10.2022 அன்று தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரியில் பாத மருத்துவ மையம் தொடங்கி வைக்கப்பட்டது. இதன் நீட்சியாக மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம் நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்படும் பாத பாதிப்புகளை கண்டறிந்து ஆரம்ப நிலை சிகிச்சை அளிப்பதன் மூலமாக கால் இழப்புகளை தடுக்கும் முன்மாதிரி திட்டத்தின் அடிப்படையில் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 1,18,000 சர்க்கரை நோயாளிகளுக்கு பாத பாதிப்புகளை கண்டறியும் முன்னெடுப்பு நடத்தப்பட்டு வருகிறது.

இந்தியாவிலேயே முதன் முறையாக அரசு மருத்துவக் கல்லூரிகளில் செயல்படுத்தப்படும் சிறப்பு வாய்ந்த திட்டமாகும். காலில் உணர்வு இழப்பின் காரணமாக ஏற்படும் புண்களை குணப்படுத்துவதற்கு Surgical Offloading எனப்படும் அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இதன்படி கடந்த 28.09.23 அன்று தஞ்சாவூரில் 14 அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த முன்னெடுப்பு ஓராண்டு கால திட்டமாக செயல்பட மருத்துவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் மூலமாக Diabetic Foot Surgery Services தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் செயல்படும் பொது அறுவை சிகிச்சைத்துறை மூலமாக தொடங்கப்பட உள்ளன. பொது அறுவை சிகிச்சைத் துறையோடு ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சைத்துறை மற்றும் இரத்த நாள அறுவை சிகிச்சைத்துறை ஆகியவற்றின் ஒருங்கிணைந்த செயல்பாடு மூலமாக StAMP Stop Amputations எனப்படும் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இந்நோக்கில் இத்துறையில் நிபுணத்துவம் பெற்றுள்ள கோவை, கங்கா மருத்துவமனையோடு தமிழ்நாடு அரசு இன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துக் கொண்டிருக்கிறது. இதன் நீட்சியாக தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து 36 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் Podiatry எனப்படும் பாத மருத்துவ மையம் துவங்கப்படவுள்ளது. சர்க்கரை நோயாளிகளுக்கு மிகவும் பலன் தரக் கூடிய மற்றும் மகிழ்ச்சி தரக்கூடிய இச்செய்திக்கு பொது மக்களிடம் நல்ல வரவேற்பு உள்ளது.

**புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்**

தமிழ்நாடு அரசு பல்வேறு தனியார் மருத்துவமனைகளோடும், தனியார் தொண்டு நிறுவனங்களோடும் இது போன்ற ஒப்பந்தங்கள் செய்து கொண்டு பயன்பாட்டில் இருந்துக்கொண்டிருக்கிறது. 02.03.2022 அன்று ரேலா மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை, இராஜீவ் காந்தி மருத்துவமனை மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனை இடையிலான கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டு இதுவரை இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் 6 கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைகளும், ஸ்டான்லி அரசு மருத்துவமனையில், 51 கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைகள் வெற்றிகரமாக நடை பெற்றுள்ளன.

03.12.2021 அன்று சிநேகா பவுன்டேஷன் உடனான தற்கொலை தடுப்பு மனநல ஆலோசனை பயிற்சிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. மேலும், 03.12.2021 அன்று ஸ்கார்ப் இந்தியா உடனான டிமென்சியா நோயாளிகள் மனநல சிகிச்சை பயிற்சிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டது. 03.12.2021 அன்று கேன்கிட்ஸ் கிட்ஸ் கேன் அமைப்புடனான குழந்தைகளுக்கான புற்றுநோய் கிசிச்சை குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டது. 26.09.2022 அன்று நயாகேர் மற்றும் எம்.எஸ்.டி அமைப்புடனான செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் உதவியுடன் கூடிய புற்றுநோய் சிகிச்சைக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. 15.09.2022 அன்று நீலகிரி ஆதிவாசிகள் நலச்சங்கம் உடனான நீலகிரி மாவட்டத்தில் சிக்கல்செல் அனிமியா சிகிச்சை குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டது. மேலும், 16.09.2022 அன்று நீலகிரி ஆதிவாசிகள் நலச்சங்கம் உடனான கோவை மாவட்டத்தில் சிக்கல்செல் அனிமியா சிகிச்சை குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டது. 26.10.2022 அன்று அப்பல்லோ லிட்டில் ஹார்ட்ஸ் பவுன்டேஷன் உடனான குழந்தை களுக்கான இதய நோய் சிகிச்சை குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டது ஏராளமான குழந்தைகள் இதன்மூலம் பயன்பெற்றுள்ளனர். 04.08.2023 அன்று டிடிகே மருத்துவமனை மற்றும் அரசு மனநல மருத்துவமனை இடையிலான போதை மீட்பு மற்றும் மறுவாழ்வு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டு, போதையினால் பாதிக்கப்பட்ட பல்வேறு நபர்களுக்கு மறுவாழ்வு மற்றும் புணர்வாழ்வு கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**நீட் தேர்வு**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் நீட் தேர்வுக்கு எதிரான கையெழுத்தியக்கத்தினை தொடங்கியிருக்கிறார், அனைவரும் இதற்கு பெரிய அளவில் ஆதரவு அளித்துக் கொண்டிருக்கின்றனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் ஒன்றிய அரசிடம் பேசும் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம், நீட் விலக்கு குறித்தான அவசியம் குறித்து எடுத்துரைத்துக் கொண் டிருக்கிறார். தமிழ்நாட்டிற்கு வந்த மேதகு குடியரசுத் தலைவர் அவர்களிடத்திலும், நீட் விலக்கு குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பேசி, அதற்குண்டான கடிதத்தினையும் கொடுத்துள்ளார்.

**மழைக்காலம் சிறப்பு மருத்துவ முகாம்**

மழைக்காலம் சிறப்பு மருத்துவ முகாம்கள் ஒரே நாளில் 1000 இடங்களில் நடத்தப்படும் என்று அறிவித்து, 2000க்கும் மேற்பட்ட முகாம்கள் நடத்தப்பட்டது. நவம்பர் 29 முதல் டிசம்பர் 31 வரை ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்த வகையில் 29.10.2023 அன்று தமிழ்நாடு முழுவதும், 1,943 முகாம்கள் நடத்தப்பட்டது. இதன்மூலம் 1,04,876 பேர் பயனடைந்துள்ளனர். இதில் 335 பேருக்கு காய்ச்சல், 254 பேருக்கு இருமல் மற்றும் சளி கண்டறியப்பட்டது. மருத்துவர்கள் ஞாயிற்று கிழமைகளில் முகாம்கள் வேண்டாம் என்றும் சனிக்கிழமை களில் நடத்த வேண்டும் என்று கோரிக்கையினை வைத்துள்ளனர். இது தொடர்பாக மருத்துவத் துறை செயலாளர் அவர்களிடமும், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் அவர்களிடமும் ஆலோசிக்கப்பட்டு, இனிமேல் வருகின்ற வாரம் முதல் சனிக்கிழமைகளில் முகாம்கள் நடத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. மருத்துவத் துறை வரலாற்றிலேயே தொடர்ந்து 10 வாரங்கள் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படுவது இதுவே முதன் முறையாகும் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தேசிய நலவாழ்வுக் குழும இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் .ம.கோவிந்தராவ், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.இரா.சாந்திமலர், தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர முன்னெடுப்பு (TAEI) மாநில திட்ட மேலாளர் மரு.மருததுரை, கோயம்புத்தூர், கங்கா மருத்துவமனை இயக்குநர் மரு. ராஜசபாபதி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### புழல் எம்.நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா! இ.கண்ணப்பன் தலைமை!

# மாதவரம் வடக்கில் மாநகராட்சி பள்ளி வகுப்பறைகள் சீரமைப்பு கண் சிகிச்சை முகாம்!

### மாதவரம் எஸ்.சுதர்சனம் 200 பேருக்கு புடவைகள் 75 பேருக்கு கண் கண்ணாடி நலஉதவிகள் வழங்கினார்!

சென்னை, நவ. 2 -

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 16 வது வட்டம் குளக்கரை பகுதியில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி வகுப்பறைகள் குழந்தைகள் படம் பார்த்து மகிழும் வண்ணமும் படிக்கும் வண்ணமும் அழகிய வண்ணங்கள் தீட்டி வகுப்பறையில் திறக்கும் விழா நடைபெற்றது.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடந்த இந்த நிகழ்ச்சிக்கு 16 வது வட்டச் செயலாளர் இ.கண்ணப்பன் தலைமை தாங்கினார்.

கவுன்சிலர் ஆ.ராஜேந்திரன், கே.சிவசங்கரன், நா. மோக ன்குமார், நாகூரார் பா.சந்திரன், எஸ்.கருணாகரன், எஸ்.கோபாலகிருஷ்ணன், இ.அருள், இ. வெங்கடேசன், கே.ஏ.ரமேஷ், புவனேஸ்வரி, மகேஷ்குமார் ,மணலி புதுநகர் வக்கீல் பி.கே.கண்ணன், சி.எம். ராஜா, எலந்தனூர் சிவப்பிரகாஷ், காமராஜ் புரம் கிருபாகரன், மணலி புதுநகர் டோமினிக், தேவராஜ், செமீன் எடிசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வர்ணம் தீட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்டு வைத்திருந்த வகுப்பறைகளை சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு திறந்து வைத்து மாணவ - மாணவிகளை வகுப்பறைக்குள் அழைத்துச் சென்றார்.

பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களின் வேண்டுகோளுக்கிணங்க, பள்ளிக்கு மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் பீரோ, மாணவர்களுக்கு தேவையான நோட்டு புத்தகம், பென்சில், பேனா, சமையல் சேமித்து வைக்க பாத்திரங்கள் ஆகியவற்றை புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை ஆசிரியரிடம் வழங்கினார்.

மேலும் கிராம மக்கள் பயன்பெறும் வகையில் அப்பாசாமி கண் மருத்துவமனை மூலம் கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது. கிட்ட பார்வை தூரப்பார்வை கண்களில் நீர் வடிதல் போன்ற குறைபாடுகளை கண்டறிந்து அவர்களுக்கு அறுவை சிகிச்சை இலவசமாக செய்ய பகுதி கழகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சுமார் 175 க்கும் மேற்பட்டோர் தங்களது கண்களை லேசர் மூலம் பரிசோதனை செய்து கொண்டனர். இதில் படிப்பதற்கு குறைபாடு உள்ளவர்களுக்கு பகுதி கழகத்தின் சார்பாக இலவச கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. மேலும் அறுவை சிகிச்சைக்கு தேவைப்படுபவர்கள் ஒரு வாரத்தில் அறுவை சிகிச்சைக்கு அழைத்துச் செல்லப்பட உள்ளனர்.

குளக்கரை பகுதியில் வசிக்கும் சுமார் 200 தாய்மார்களுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு புடவைகள் மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் ஏற்பாட்டில் மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. வழங்கினார்.

இந்த நிகழ்ச்சிகளில் பூபதி, ஏழுமலை, முனுசாமி, கிருபாகரன், எம்.குமார், வெங்கடேசன், வடிவேலு, மோகன், தயாளன், சேகர், வையாபுரி, தசரதன், ராமு, மனோகரன், சந்தானராமு, பழனி, பக்தன், மாரி, வரதன், ஏழுமலை, ஜடாமுனி, ஜோதி, ராமு, லட்சுமணன், வெங்கடேசன், ரிஷி, விக்னேஷ், விக்கி, தமிழரசன், விஜய், பார்த்திபன், மணிகண்டன், சேகர், நாகராஜ், ராமதாஸ், கார்த்திக், ராஜேஷ், வெங்கடேசன், செல்வமணி, விஜய் டிவி வினோத்குமார், ஷாம், குமரவேல், கோபாலகிருஷ்ணன், நித்திஷ், ஏழுமலை, தயாளன், ஆகாஷ், பாபு, வாசு, மகேஸ்வரன், பாஸ்கர் சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இறுதியாக மாணவர் அணி துணை அமைப்பாளர் ஆர்.பி.சௌந்தரராஜன் மற்றும் எஸ் மஞ்சுநாதன் ஆகியோர் நன்றி கூறினார்.

# கழகத்தின் வளர்ச்சி கண்டு வியக்கிறேன்; கொள்கை மறவர்களை மறவோம்!
# பா.ஜ.க. - அ.தி.மு.க.வின் போலி அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்!



அமைச்சர்
**உதயநிதி ஸ்டாலின்**
(கழக இளைஞர் அணிச் செயலாளர்)

**சி**றிய விதை போல மனதில் தோன்றிய ஓர் எண்ணம், இந்தக் கழகத்தின் பலத்தினால் படிப்படியாக வளர்ந்து ஆலமரமாகக் கிளைவிடுவதைக் கண்முன் கண்டு வியக்கிறேன். சமீபத்தில், நான் சென்றுவந்த தேனி, விருதுநகர், நெல்லை மற்றும் கன்னியாகுமரி மாவட்ட சுற்றுப்பயணமே அதற்கான சான்று.

கடந்த ஆண்டு, மே மாதம் கழக நிகழ்ச்சிகளுக்காக என்னிடம் தேதி கேட்டு வந்த கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் அண்ணன் தளி பிரகாஷ் அவர்களிடம், ‘கழக முன்னோடிகளின் உழைப்பைப் போற்றும் வகையில், அவர்களுக்குப் பொற்கிழி வழங்கலாம்’ என்ற என் எண்ணத்தைப் பகிர்ந்துகொண்டேன். அதன்படி, அவர் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு மத்தியில் 500 கழக முன்னோடிகளுக்குத் தலா ரூ.5,000 என பொற்கிழிகளை வழங்கினார்.

அந்த மேடையில் முன்னோடிகள் பலர் அண்ணா, கலைஞர் கையெழுத்திட்ட உறுப்பினர் அட்டைகளை, அவர்கள் எழுதிய கடிதங்களை எடுத்து வந்து காண்பித்தனர். பெரியாரை, அண்ணாவை சந்தித்த நிகழ்வுகளைப் பகிர்ந்துகொண்டனர். தங்களின் அனுபவங்களை, உழைப்பை என்னிடம் சொல்லிவிடவேண்டும் என்ற தவிப்பு, அனைவரிடமும் இருந்ததை உணர்ந்தேன்.

முன்னோடிகளின் பங்களிப்பை, உழைப்பை, அனுபவத்தை கவுரவிக்கும் வகையிலும் அவற்றை இளைஞர் அணியினருக்குக் கடத்தும் வகையிலும், இந்தப் பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சியை மாவட்டந்தோறும் நடத்த மாவட்ட செயலாளர்களைக் கேட்டுக்கொள்ள வேண்டும் என்று அன்றே முடிவுசெய்தோம். அதைத் தொடர்ந்து சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதி கழக முன்னோடிகள் 200 பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபாயை பொற்கிழியாக என் கைகளால் வழங்கவைத்து அவர்களை கவுரவித்தார் மாவட்டக் கழகச் செயலாளர் சிற்றரசு. ‘பொற்கிழியாக 10 ஆயிரம் வழங்குவதுதான் சரியாக இருக்கும்’ என அன்று முடிவானது.

அந்த வரிசையில் சமீபத்தில் நடைபெற்ற தேனி, விருதுநகர், நெல்லை, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கான பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் ‘கழக முன்னோடிகள் மாநாடு’ என்று சொல்லும் வகையில் மிகச்சிறப்பாக நடைபெற்று முடிந்தன. இப்படி இதுவரை மொத்தமுள்ள 72 மாவட்டக் கழகங்களில் 46 கழக மாவட்டங்களின் சார்பில் 44 கோடியே 73 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் கழக முன்னோடிகளுக்கு என் கைகளால் பொற்கிழியாக வழங்கப்பட்டுள்ளது.

கழகப் பணி அனுபவங்களின் மொத்த வடிவமாக அமர்ந்திருக்கும் முன்னோடிகள் ஒவ்வொருவரையும் பெரியார் - அண்ணா - கலைஞர் - பேராசிரியர் ஆகியோரின் மறு உருவமாகவே பார்க்கிறேன். இந்தப் பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சிகளை ஒரு பேரன் தாத்தா பாட்டிகளுக்குச் செய்யும் கடமையாகவே கருதுகிறேன்.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமீபத்தில், கொளத்தூர் தொகுதியில் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கிப் பேசும்போது, “இளைஞர் அணி செயலாளர் தம்பி உதயநிதி தன்னிடம் நிகழ்ச்சிகளுக்குத் தேதி கேட்கும் மாவட்ட செயலாளர்களிடம், ‘கழகமூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கினால் தேதி தருகிறேன்’ என்று சொல்லி அதை உறுதிப்படுத்திவிட்டுத்தான் அந்த மாவட்டத்துக்குச் செல்கிறார். அவரை நான் பாராட்டுகிறேன். மகன் என்பதற்காக அல்ல. கட்சி முன்னோடிகளுக்கு உரிய மரியாதையைத் தரும் உதயநிதியை கழகத் தலைவராகப் பாராட்டுகிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.**

**இந்தப் பாராட்டு அனைத்தும் பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யும் மாண்புமிகு அமைச்சர்கள் - மாவட்டக் கழகச் செயலாளர்களையே சேரும். அவர்கள் அனைவருக்கும் இந்த நேரத்தில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.**

வருவாய் மாவட்டவாரியாக நடைபெற்றுவரும் இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டமும் ஒரு சிறுபுள்ளியில் இருந்து தொடங்கியதுதான். சேலத்தில் வரும் டிசம்பர் 17-ம் தேதி நடைபெற உள்ள இளைஞர் அணி மாநாட்டுக்கு இளைஞர்களை மனரீதியாகத் தயார்படுத்தும் வகையில், மாவட்டந்தோறும் சென்று அவர்களைச் சந்திக்கலாம் என்ற எண்ணத்தில் தொடங்கியதுதான் இந்தச் செயல்வீரர்கள் கூட்டம்.

முதல் கூட்டம் கடந்த ஆகஸ்ட் மாதம் 9-ம் தேதி காஞ்சிபுரத்தில் நடைபெற்றது. மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் சுந்தர் அவர்கள் தலைமையில், நடைபெற்ற இந்தக் கூட்டம் முன்மாதிரியாக அமைந்தது என்றால், அது மிகையல்ல. அந்த வரிசையில் இந்தச் சுற்றுப்பயணத்தில் தேனி, விருதுநகர், நெல்லை, கன்னியாகுமரியில் நடைபெற்ற இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் மிகத் தேர்ந்த திட்டமிடலுடன் பிசிறின்றித் தெளிவாக நடைபெற்று முடிந்துள்ளன.

ஒவ்வொரு செயல்வீரர்கள் கூட்டத்திலும் அதிகபட்சம் அரை மணிநேரம் உரையாற்றுகிறேன். தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக உள்ள ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசையும், மனிதகுலத்துக்கே எதிரியாக உள்ள பா.ஜ.க.வையும், அதற்கு உடந்தையாக இருந்து தமிழர்களின் நலன்களை விட்டுக்கொடுத்த அடிமை அ.தி.மு.க.-வையும் சம்பவங்களை உதாரணமாகச் சொல்லி விமர்சித்துப் பேசுகிறேன். நான் பேசும் விஷயங்களை இளைஞர்கள் வரவேற்று உள்வாங்கிக் கொள்கின்றனர்.

“குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க நினைப்பதுதான் பா.ஜ.க.-வின் அரசியல். அமைதியான தெளிந்த நீரோடை போல் உள்ள தமிழ்நாட்டில், அவர்களால் அரசியல் செய்ய முடியவில்லை. இந்தத் தெளிந்த நீரோடையை அவதூறு பேச்சு, சர்ச்சை, சாதி-மதத் துவேஷம் போன்ற அழுக்குகளைக் கொட்டி குழப்பிவிட்டு, பிறகு அரசியல் செய்ய நினைக்கிறது. ஆனால், பல சமயங்களில் அழுக்கைக் கொட்டும்போதே பிடிபட்டு அம்பலப்பட்டு விடுகிறது. ‘யாருக்கும் தெரியாமல் அழுக்கைக் கொட்டிவிட்டோம்’ என்று நினைக்கையில், சி.சி.டி.வி காட்சிகள், சாட்சியங்களுடன் கையும் களவுமாகப் பிடிபட்டு முகமூடி கிழிக்கப்படுகிறது.

தங்களின் செயல்பாடுகள் மூலம் மக்களின் மனங்களை வெல்வதுதானே சிறந்த அரசியலாக இருக்க முடியும். அந்தக் கொள்கைப் பயணத்தில் இளைஞர்களைக் கொள்கை ரீதியாக வளர்த்தெடுத்து, அவர்களைத் தலைவர்களாக உருவாக்கி, மக்கள் பிரதிநிதிகளாக உயர்த்தி, அவர்கள் மூலம் மக்கள் நலத்திட்டங்களைச் செயல்படுத்தி… என அது ஒரு நீண்ட நெடிய பயணம்.

அதைத்தான் பெரியார்-அண்ணா - கலைஞர் போன்றோரெல்லாம் பின்பற்றிச் சமூக நீதி, மாநில சுயாட்சி அரசியலைக் கையிலெடுத்து, தமிழ்நாட்டை வளர்த்தெடுத்தனர். அவர்களின் தொடர்ச்சியாகத்தான் நம் தலைவர் அவர்கள் இன்று கழகத்தையும் தமிழ்நாட்டையும் வழிநடத்தி வருகிறார்.

ஆனால், `இன்ஸ்டன்ட் அரசியல்' செய்யும் பா.ஜ.க.விடம் அவ்வளவு பொறுமை இல்லை. இன்று அவதூறு பரப்பி, நாளையே கோட்டைக்குள் சென்றுவிட வேண்டும் என்ற வெறி மட்டுமே அவர்களிடம் உள்ளது.

**இந்தப் போலி அரசியல்பயணத்தில் அங்கங்கு இருக்கும் சமூக விரோதிகளை எல்லாம் அள்ளிப்போட்டுக்கொண்டு, அரசியல் என்ற பெயரில், மக்கள் விரோதச் செயல்களில் ஈடுபட்டு வருகிறது.**

**இப்படி உருவாக்கப்படும் இந்தப் பரபரப்புகளால் வரும் ஊடக வெளிச்சத்தைத் தன் மீது வாங்கிக்கொண்டு மறுபக்கம் அ.தி.மு.க.வைப் பாதுகாக்கவும் நினைக்கிறது. பா.ஜ.க. உடனான கூட்டணி முறிவு, தனித்துப் போட்டி போன்றவை அந்த நாடகத்தின் சில அத்தியாயங்கள்தான்.**

இந்த நாடகத்தில், ‘தமிழ்நாட்டின் உரிமையை விட்டுக்கொடுத்தவர்கள்’, `நீட் தேர்வை நுழையவிட்டு, 20-க்கும் மேற்பட்டோரின் சாவுக்குக் காரணமாக இருந்தவர்கள்’, ‘ஸ்டெர்லைட் துப்பாக்கிச் சூட்டில் 13 பேர் இறப்புக்கு காரணமானவர்கள்’, மக்களின் வரிப் பணத்தில் பல லட்சம் கோடி ரூபாயைச் சுருட்டியவர்கள்’ என்ற அ.தி.மு.க. மீதுள்ள ஊழல் கறையை, இரத்தக் கறையைக் கழுவிவிடப் பா.ஜ.க. நினைக்கிறது. ‘பூசியவர்களே கறைகளைக் கழுவியும் விடுகிறார்களே’ என்று எடப்பாடியும் கைகளைக் காட்டிக்கொண்டு நிற்கிறார்.

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் மீதான ஊழல் வழக்குகளுக்கு அனுமதி அளிக்காமல் ஆளுநர் முட்டுக்கட்டை போடுவது, பொள்ளாச்சி பாலியல் பலாத்கார வழக்குகள் போன்ற முக்கியமான பல வழக்குகளைச் சி.பி.ஐ கிடப்பில் போட்டிருப்பது போன்றவை எல்லாம் அதைத்தான் உணர்த்துகின்றன.

**`கோத்ரா ரயில் எரிப்புச் சம்பவம்', தூண்டிவிடப்பட்ட `மணிப்பூர் கலவரம்', `சி.ஏ.ஜி.' வெளியிட்ட 7.5 லட்சம் கோடி ரூபாய் ஊழல் என ஏற்கெனவே இரத்தக் கறையும் ஊழல் கறையும் படிந்தவர்களால், எடப்பாடி மீதுள்ள அதே கறைகளை எப்படிக் கழுவிவிட முடியும்?**

**பாசிச பா.ஜ.க.-வுக்கு அடிமையாக இருந்து மக்களின் உரிமையை விட்டுக் கொடுத்ததற்கான தண்டனையை, மக்கள் எடப்பாடி அண்ட் கோ-வுக்கு வழங்குவார்கள் என்பது நிச்சயம். எடப்பாடியின் தொடர் தோல்வியும் அதைத்தான் உணர்த்துகின்றன.”**

மக்கள் விரோத அடிமை அ.தி.மு.க. - பாசிச பா.ஜ.க. குறித்து ஆயிரக்கணக்கான இளைஞர்கள் மத்தியில் இப்படிப் பேசும்போது அவர்கள் கூர்ந்து கவனித்து உள்வாங்குவதை உணரமுடிகிறது.

நவீன தமிழ்நாட்டின் சிற்பியான முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டை அரசின் சார்பிலும், கழகத்தின் சார்பிலும், மக்களுக்குப் பயனுள்ள வகையில் எப்படியெல்லாம் கொண்டாடுகிறோம் என்பதை, ஒவ்வொரு மேடையிலும் பட்டியலிடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறேன்.

‘முடியவே முடியாது’ என்றார்கள். ஆனால், கலைஞர் பெயரில் மகளிருக்கு மாதந்தோறும் உரிமைத் தொகை வழங்கி வருகிறோம். ஆறேழு ஆண்டுகளுக்கு முன் அடிக்கல் நாட்டிய எய்ம்ஸைக் கட்ட அவர்களுக்கு மனமில்லை. ஆனால், கலைஞர் பெயரில் மதுரையில் பிரம்மாண்ட நூலகத்தையும், சென்னையில் மருத்துவமனையையும் நம் முதலமைச்சர் அவர்கள் கட்டியெழுப்பித் திறந்து வைத்துள்ளார்” என்பதைக் குறிப்பிடும்போது மக்கள் நல அரசுக்கும் - மக்கள் விரோத கும்பலுக்குமான வித்தியாசத்தை இளைஞர்கள் நன்றாகப் புரிந்துகொள்கின்றனர்.

ஒரு கட்சி ஆளுங்கட்சியாகும்போது, கட்சியைக் கைவிட்டு விடுவார்கள். அதன் பணிகள் தொய்வடையும் என்று கூறுவார்கள். ஆனால், நம் கழகத் தலைவர் அவர்கள் எதிர்க்கட்சியில் இருப்பது போன்ற மனநிலையுடன் எப்படி கட்சிப் பணியாற்றுகிறார் என்பதை ஒவ்வொரு மேடையிலும் பட்டியலிடுகிறேன்.

**“ஒரு பக்கம் ‘கள ஆய்வில் முதலமைச்சர்’ என மண்டல வாரியாக அரசு ஆய்வுக் கூட்டங்கள், மறுபக்கம் கழகத் தலைவராக மண்டல வாரியாக, `பாக முகவர்கள் மாநாடு' நடத்துகிறார். முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்தநாளைக் கொண்டாட அரசின் சார்பில், 13 குழுக்கள் அமைத்துள்ளார். அதேபோல கழகத்தின் ஒவ்வோர் அணிக்கும் சில பணிகளை ஒதுக்கித் தந்து கலைஞரின் நூற்றாண்டை மக்களுக்குப் பயனுள்ள வகையில் கொண்டாடி வருகிறார். கூட்டணிக் கட்சிகளுடன் இணைந்து சட்டமன்றத்தை மிகச் சிறப்பாக நடத்திச் செல்கிறார். மறுபுறம் ‘இந்தியா கூட்டணி’ அமைத்து, நாடாளுமன்றத் தேர்தல் பணியைத் தொடங்கிவிட்டார்.**

**இப்படி முதலமைச்சர் - கழகத் தலைவர் என இரு பொறுப்புகளிலும் தன்னுடைய உழைப்பால் தொய்வில்லாமல் தொடர்கிறார். மக்கள் நலத் திட்டங்களின் வெற்றியும் தொடர் தேர்தல் வெற்றியும் அதைத்தான் உணர்த்துகின்றன” என்று பேசும்போது நம் கழகத் தலைவரின் உழைப்பை நம் இளைஞர்கள் தெளிவாகப் புரிந்துகொள்கின்றனர்.**

“சமூக வலைத்தளத்திலேயே கருத்துகளைப் பரிமாறிக்கொள்கிறோம். காணொலிக் காட்சி வாயிலாக உரையாடிக்கொள்கிறோம். இந்த நவீன தொழில்நுட்ப யுகத்தில் மாநாடு நடத்தி, லட்சக்கணக்கான இளைஞர்களை ஒரே இடத்தில் கூட்டவேண்டியதன் அவசியம் என்ன?” என்ற கேள்வியையும் ஒவ்வொரு கூட்டத்திலும் நானே எழுப்பிப் பதிலளிக்கிறேன்.

“தலைமைக் கழகம் தொடங்கி, கடைக்கோடி கிளைக்கழகம் வரை, நம் இயக்கம் மிகப்பெரிய கட்டமைப்பைக் கொண்டது. மேலும் 23 அணிகள், ஒவ்வொன்றுக்கும் ஒன்றிய -நகர-பகுதி- பேரூர் வரை நிர்வாகிகள் இருக்கிறார்கள். இளைஞர் அணி கிளைக்கழகம் வரை நிர்வாகிகளைக் கொண்டது. இந்தக் கட்டமைப்பினால்தான் பல இடர்களுக்கு இடையிலும் கழகம் தொய்வின்றி, தன் வெற்றிநடையைத் தொடர்கிறது.

இப்படிப் பலம் வாய்ந்த கட்டமைப்பை, இந்தச் சங்கிலித் தொடரை நம் அடுத்தடுத்த தலைமுறைக்குக் கடத்தவும், உங்களின் தேவைகளை நிறைவேற்றவும், உங்களின் கோரிக்கைகளுக்குச் செவிகொடுக்கவும் கழகம் இருக்கிறது என்பதை மக்களுக்கு உணர்த்தவும்தான் இந்த மாநாடு.

தவிர, நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு நடைபெறும் மாநாடு. கழகத்தின் பலத்தை எதிர்க்கட்சிகளுக்கு உணர்த்தவும், நீண்ட பாரம்பரியம் கொண்ட, முதிர்ந்த அரசியல் அனுபவம் கொண்ட கழகம் நமக்குத் துணையாக இருக்கிறது என்பதை மக்களுக்கு உணர்த்தவும் கழகத்தில் உள்ள இளைஞர்கள் அனைவரும் சேலத்தில் கூட வேண்டியது அவசியம்” என்று உரையாற்றுகிறேன்.

**“சமீபத்தில், மதுரையில் நடைபெற்று முடிந்த ஒரு கட்சியின், மாநாட்டில் அதன் கொள்கைகள் குறித்துப் பேசப்பட்டதா, அந்தக் கட்சியின் ஆட்சியின் சாதனைகளாக எதுவும் விவாதிக்கப்பட்டதா? அந்த `புளிசாத மாநாடு' போல் இல்லாமல் நம் இளைஞர் அணி மாநாடு நம் கொள்கைகளைப் பேசக்கூடியதாக, நம் தலைவர்களின், கழக அரசின் சாதனைகளைப் பட்டியலிடும் வகையில், நம் வரலாற்றைத் திரும்பிப் பார்த்து நம் செயல்பாடுகளை மேம்படுத்திக்கொள்ளும் வகையில் இருக்கும்” என்ற உறுதியையும் அவர்களுக்கு அளிக்கிறேன்.**

அதேபோல நம் கழகம் முன்னெடுத்துள்ள, ‘நீட் விலக்கு நம் இலக்கு’ என்ற கையெழுத்து இயக்கம் குறித்தும், நீட் தேர்வுக்கு எதிரான ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் மனநிலையை ஒன்றிய அரசுக்கு உணர்த்தும் வகையில், 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்துகளைப் பெற வேண்டியதன் அவசியம் குறித்தும் மறக்காமல் குறிப்பிடுகிறேன். மேலும், அந்தச் செயல்வீரர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டுள்ள இளைஞர்கள் அனைவரும் ‘நீட் விலக்கு’க்கு தங்களின் ஆதரவை தெரிவிக்கும் வகையில், சம்பந்தப்பட்ட இணையதளத்துக்குச் சென்று கையெழுத்திடுகின்றனர்.

இதுவரை 20 வருவாய் மாவட்டங்களில் இந்தச் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்று முடிந்துள்ளது. மீதியுள்ள 18 வருவாய் மாவட்டங்களுக்கான செயல்வீரர்கள் கூட்டத்தை டிசம்பர் முதல் வாரத்துக்குள் நடத்தி முடிக்க வேண்டும் என்று திட்டமிட்டுள்ளோம்.

அதேபோல ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ஒரு ‘கலைஞர் நூலகம்’ அமைக்க வேண்டும் என்று கழகத் தலைவர் அவர்கள் இளைஞர் அணியை அறிவுறுத்தி உள்ளார்கள். அதன்படி, கிருஷ்ணகிரி தொகுதியில் முதல் ‘கலைஞர் நூலக’த்தைத் தொடங்கி வைத்தோம். இந்தச் சுற்றுப்பயணத்தில் கம்பம், பெரியகுளம், நாங்குனேரி, பாளையங்கோட்டை, பத்மநாபபுரம், கன்னியாகுமரி ஆகிய 6 தொகுதிகளுக்கான ‘கலைஞர் நூலக’ங்களைத் தொடங்கி வைத்துள்ளோம். இதுவரை 15 தொகுதிகளில், கலைஞர் நூலகங்கள் தொடங்கப்பட்டு, மிகச்சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

இப்படி, இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம், கழக மூத்த முன்னோடிகளுக்குப் பொற்கிழி வழங்குவது, கலைஞர் நூலகங்கள் திறப்பு, பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்படும் அரசு நலத்திட்டங்களின் முன்னேற்றம் குறித்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில் ஆய்வுக் கூட்டம்… என இந்தச் சுற்றுப்பயணம் எதிர்பார்த்ததைவிட, மிகச்சிறப்பாக அமைந்திருந்தது மனதுக்கு நிறைவைத் தருகிறது.

இந்த 4 மாவட்டங்களிலும் இந்த நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்த மாண்புமிகு அமைச்சர்கள் அண்ணன் ஐ.பெரியசாமி, அண்ணன் கே.கே.எஸ்.எஸ்.ஆர், அண்ணன் தங்கம் தென்னரசு, அண்ணன் மனோ தங்கராஜ், மாவட்டச் செயலாளர்கள் அண்ணன் ஆவுடையப்பன், அண்ணன் கம்பம் ராமகிருஷ்ணன், அண்ணன் டி.பி.எம்.மைதீன்கான், அண்ணன் மகேஷ், அண்ணன் தங்க தமிழ்ச்செல்வன் ஆகியோருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நெல்லையில் அரசு நிகழ்ச்சிகளில் எங்களுடன் பங்கேற்ற மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அண்ணன் அப்பாவு அவர்களுக்கும் நன்றி.

இந்த மாவட்டங்களில் இளைஞர் அணி நிர்வாகிகளை ஒருங்கிணைக்கும் துணைச் செயலாளர்கள் இன்பா ரகு, ஜி.பி. ராஜா ஆகியோருக்கும் நன்றி. அரசு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்த சிறப்புத் திட்ட செயலாக்கத்துறைச் செயலாளர் மருத்துவர் தாரேஷ் அகமது இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உள்ளிட்ட அனைத்து அரசு அலுவலர்களுக்கும் நன்றி.

கழக நிர்வாகிகளுக்கு ஒரு வேண்டுகோள். நிகழ்ச்சிகளில் பட்டாசு வெடிப்பது, பூங்கொத்து அளிப்பது, பொன்னாடை - மாலை அணிவிப்பது, ஃப்ளெக்ஸ் பேனர் வைப்பது போன்ற தேவையற்ற ஆடம்பரங்களைத் தவிருங்கள். கழக வேட்டி - துண்டு மற்றும் புத்தகங்களை அன்பளிப்பாக அளியுங்கள். அவை தேவையானோருக்கு பயன்படும். விரும்புவோர் சிறிய தொகையாக இருந்தாலும் பரவாயில்லை; இளைஞர் அணி வளர்ச்சி நிதியாக அளியுங்கள். நன்றி!

‘**இ**ன்ஸ்டன்ட் அரசியல்’ செய்யும் பா.ஜ.க.விடம் அவ்வளவு பொறுமை இல்லை. இன்று அவதூறு பரப்பி, நாளையே கோட்டைக்குள் சென்றுவிடவேண்டும் என்ற வெறி மட்டுமே அவர்களிடம் உள்ளது.

இந்தப் போலி அரசியல்பயணத்தில் அங்கங்கு இருக்கும் சமூக விரோதிகளை எல்லாம் அள்ளிப்போட்டுக்கொண்டு, அரசியல் என்ற பெயரில், மக்கள் விரோதச் செயல்களில் ஈடுபட்டு வருகிறது.

இப்படி உருவாக்கப்படும் இந்தப் பரபரப்புகளால் வரும் ஊடக வெளிச்சத்தைத் தன் மீது வாங்கிக்கொண்டு மறுபக்கம் அ.தி.மு.க.-வைப் பாதுகாக்கவும் நினைக்கிறது. பா.ஜ.க. உடனான கூட்டணி முறிவு, தனித்துப் போட்டி போன்றவை அந்த நாடகத்தின் சில அத்தியாயங்கள்தான்.



சென்னை, தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (31.10.2023) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில், சிறந்த தமிழ் உச்சரிப்புக்கான விருதுகளை, காட்சி ஊடகங்களில் பணிபுரியும் செய்தி வாசிப்பாளர்கள், நேர்காணல் செய்பவர்கள் மற்றும் நிகழ்ச்சித் தொகுப்பாளர்களுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் மரு.இரா.செல்வராஜ், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் ஆகியோர் உள்ளனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (31.10.2023) நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில், வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் ஆணையாளர் டாக்டர். ஜெ.ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் மரு.எஸ்.விஜயகுமார், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், பேரூராட்சிகள் இயக்குநர் கிரண் குரலா, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேலாண்மை இயக்குநர் வி.தட்சிணாமூர்த்தி, நகராட்சி நிருவாக இயக்குநர் சு.சிவராசு மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ‘தேர்தல் பத்திரம் மூலம் நிதி நிலைமையை அறிய மக்களுக்கு உரிமையில்லை’ என்ற

# பா.ஜ.க.வின் கூற்று - ‘அதிகாரம் மக்களுக்கே’ என்ற சட்ட உத்தரவாதம் பறிக்கப்பட்டு விட்டது!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, நவ.2-

தேர்தல் பத்திரம் மூலம் நிதி நிலைமையை அறிய மக்களுக்கு உரிமையில்லை என உச்சநீதிமன்றத்தில் பா.ஜ.க. அரசு கூற்று 2014-இல் ஆட்சிக்கு வந்த மோடி அரசு எதிலும் வெளிப்படைத்தன்மை நம்பகத் தன்மை இருக்கும் என்று கொடுத்த வாக்குறுதி என்ன வாயிற்று? “அதிகாரம் மக்களுக்கே” என்ற அரசமைப்புச் சட்ட உத்தரவாதம் பறிக்கப்பட்டுவிட்டது என திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

எதிலும் வெளிப்படைத் தன்மை, நம்பகத்தன்மை என்று வாக்குறுதி கொடுத்து ஆட்சிக்கு வந்த நரேந்திர மோடி தலைமையிலான ஒன்றிய அரசு தேர்தல் பத்திரம் என்ற சட்டத்தின் பெயரில் மக்களுக்கு இருந்த தகவல் அறியும் உரிமையைப் பறித்துவிட்டது. ஜனநாயகம், மக்கள் உரிமைகளைப் பறிக்கும் ஒன்றிய பி.ஜே.பி. அரசைப் பொது மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

நம் நாட்டில் கருப்புப் பணத்தின் திருவிளையாடல் தேர்தலின்போது மிக அதிகம். அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை முந்தைய சட்டமும் மோடி அரசின் சட்டமும்! ஓட்டுக்குப் பணம் கொடுப்பதும், அதை வாங்கிட வாக்காளர்கள் ஆவலுடன் இருப்பதும் நம்பர் ஒன் ஒழுக்கச் சிதைவு அல்லவா?

தேர்தல் நிதி என்று அரசியல் கட்சிகளுக்குக் கொடுப்பதில்கூட முந்தைய அரசுகள் நடைமுறைப்படுத்திய சட்ட விதிமுறைகளை ஊழலை ஒழிக்கவே வந்துள்ளோம் என்று கூறி, 2014-இல் ஆட்சிக்கு வந்த ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. ஒன்றிய அரசு, 2017- இல் தேர்



தல் பத்திரம் ( Electoral Bond) என்று நிதி மசோதாவே அறிமுகப்படுத்தப்பட்டு நிறைவேற்றியது. இதன்படி அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிப்பவர்களின் அடையாளங்களை வெளிப்படுத்தத் தேவையில்லை.

ஸ்டேட் பாங்க் ஆஃப் இண்டியாமூலம் (எஸ்.பி.அய்.) தனி நபர்களும், நிறுவனங்களும் அரசியல் கட்சிகளுக்கு அடையாளம் வெளியே தெரியாமல் 2000 ரூபாய் முதல் ஒரு கோடி ரூபாய்வரை கொடுக்கலாம் என்று சட்டத் திருத்தம் நிறைவேற்றியது.

முன்பு உள்ள சட்டப்படி, தேர்தல் நன்கொடைகள் கம்பெனி சட்டப்படி மூன்றாண்டுகளுக்குரிய நிகர லாபத்தில் 7.5 சதவிகித நிதியைத்தான் அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிக்க முடியும். இந்த சட்டப் பிரிவை மோடி அரசு நீக்கிவிட்டுத்தான், இந்தத் தேர்தல் பத்திரம் வாங்கி அதன்படி வெகுதாராளமாய், அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிக்க முடியும் என்ற சட்டம் ‘நீர் மேல் எழுத்தா?’

இதன் மூலம் பொது ஒழுக்கம் வளருமா? இது சம்பந்தமாக 5 நீதிபதிகளைக் கொண்ட அரசமைப்புச் சட்ட அமர்வில் இந்தத் தேர்தல் பாண்டு முறை குறித்து கடந்த பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்த வழக்கு, இன்று முதல் விசாரணைக்கு வரும் நிலையில், இந்திய அரசு சார்பில் அதன் தலைமை வழக்குரைஞர் ஒரு பிரமாணப் பத்திரத்தை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

(நிதி மசோதா என்றால் விவாதமில்லாமல் நிறைவேற்ற வழிவகை செய்யும் சட்ட முறை என்பது பொருள். அப்படியே இந்தத் தேர்தல் பத்திரம் முறையும் நிறைவேறியது).

**தகவல் அறிய பொதுமக்களுக்கு உரிமை இல்லையாம்!**

ஒன்றிய அரசின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிரமாணப் பத்திரத்தில், “தேர்தல் நிதிப் பத்திரம்மூலம் அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிக்கப்படுபவர்களின் விவரங்களை அறிய பொது மக்களுக்கு உரிமை இல்லை” என்று குறிப்பிட்டுள்ளது மிகவும் அதிர்ச்சி அளிப்பதாக இல்லையா?

இதுபற்றி விரிவான விவாதம் நடத்தப்படாமல் தடுக்க ‘நிதி மசோதா’ முத்திரை குத்தி நாடாளுமன்றத்திலும் நிறைவேற்றப்பட்டது. தேர்தல் பத்திரம்மூலம் அதிகமான நன்கொடை பெற்றதும் பா.ஜ.க.வே!

இப்போது பகிரங்கமாகவே பொதுமக்களுக்கு இத்தகவலைத் தெரிந்துகொள்வதற்கான உரிமை கிடையாது என்பது, “குதிரை குப்புற தள்ளியது மட்டுமல்ல குழியும் பறித்த கதை”யாகும்!

2014 இல் இவ்வாட்சி பிரதமர் மோடி தலைமையிலான ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. ஆட்சி பதவிக்கு வருமுன் என்ன உறுதி மொழி சொன்னார்கள்?

**வெளிப்படைத்தன்மையோ - நம்பகத்தன்மையோ இல்லாத சட்டம்!**

1. எதிலும் வெளிப்படைத் தன்மை (Transparency) யும், நம்பகத்தன்மை (Credibility)யும் இருக்கும் என்று கூறியது இப்போது நடக்கிறதா? நேர்முரணாக அல்லவா ஒன்றிய பி.ஜே.பி. அரசு அதிவேகமாக நடைபோடுகிறது.

(அ) தற்போதுள்ள நிதிச் சட்டங்கள்படி, சாதாரணமாக ரூ.2000த்திற்கும் மேல் எந்த அறக்கட்டளைகளாவது நன்கொடை கொடுத்தால், அவர்களுக்கு வரி விலக்கு (80ஜி) கிடைக்காது!

(ஆ) சொந்த உறவுகளுக்கு ரூ.2 லட்சத்திற்கு மேல் ரொக்கமாக கொடுத்தால், அதை அவர் வாங்க முடியாது. மீறி வாங்கினால், 100 சதவிகிதம் அபராதம் கட்டியாகவேண்டும்!

(இ) ஒரு வியாபாரியோ அல்லது வேறு பணிக்கோ ஒரே நேரத்தில் 2 லட்சம் ரூபாய் ரொக்கமாக (பணமாக) ஒரே நபரிடமிருந்தோ, ஒரு பொருள் வாங்கியவரிடமிருந்தோ பெற்றால் அது சட்டப்படி தவறாகும்! 100 சதவிகிதம் அபராதம் கட்டியாகவேண்டும்!

இப்படி அன்றாட நடவடிக்கைகளுக்கும் கடுமையான கட்டுப்பாடு.

ஆனால், யார் வேண்டுமானாலும் ஒரு கோடி ரூபாய்க்கு தேர்தல் பாண்டு மூலம் கட்சி நிதி பெறலாம் என்றால், அது அரசியல் அறமா? பொது ஒழுக்கச் சிதைவுக்குக் கதவு திறப்பதல்லவா?

**மக்கள் புரிந்துகொள்ளட்டும்!**

குடிமக்கள் அதைத் தெரிந்துகொள்ள உரிமையற்றவர்கள் என்று கூறுவது ஜனநாயகத் தன்மையைக் காப்பாற்றுவதாகுமா?

நமது அரசமைப்புச் சட்டத்தின் தொடக்கமே...“We the People....” மக்களாகிய நாம் என்று தொடங்கி, இறையாண்மை, முழு அதிகாரம் மக்களிடம் மட்டும் தான் என்று அறுதியிட்டுக் கூறியிருக்கிறதே! அந்த மக்களுக்கு இந்தத் தகவல் பெற உரிமை இல்லை என்பது எவ்வகையில் நியாய மாகும்? மக்கள் புரிந்து கொள்ளட்டும்!

இவ்வாறு கி.வீரமணி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### தொன்மையான 195 திருக்கோயில்களில்

# திருப்பணிகள் தொடங்க மாநில வல்லுநர் குழு ஒப்புதல்!

சென்னை, நவ. 2 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவுரையின்படி, சென்னை, நுங்கம்பாக்கம், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில் தொன்மையான திருக்கோயில்களை பழமை மாறாமல் புதுப்பிக்கும் வகையில் திருப்பணிகளுக்கு ஒப்புதல் வழங்கிட மாதம் இருமுறை மாநில அளவிலான வல்லுநர் கூட்டம் நடைபெற்று வருகிறது. அதன்படி நேற்று முன்தினம் (31.10.2023) மாநில அளவிலான வல்லுநர் குழு கூட்டம் இணை ஆணையர் (திருப்பணி) பொ.ஜெயராமன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கடலூர் மாவட்டம், விருத்தாசலம், விநாயகர் திருக்கோயில், குறிஞ்சிப்பாடி, திருமூலநாதர் மற்றும் சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருவாரூர் மாவட்டம், நன்னிலம், அய்யனார் திருக்கோயில், குடவாசல், எமதண்டீஸ்வரர் திருக்கோயில், திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம், கன்னிமூல பிள்ளையார் திருக்கோயில், சேரன்மகாதேவி, அபிராமி அம்பாள் திருக்கோயில், கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம், மகாதேவர் திருக்கோயில், கிள்ளியூர், கரியமாணிக்கத்தாழ்வார் திருக்கோயில், திருச்சி மாவட்டம், மணப்பாறை, எல்லையம்மன் திருக்கோயில், இலால்குடி ஸ்ரீனிவாசப் பெருமாள் திருக்கோயில், பெரம்பலூர் மாவட்டம், குன்னம், நாச்சியார் அம்மன் திருக்கோயில், சிறுவாச்சூர், மதுரகாளியம்மன் திருக்கோயில், கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம், திரௌபதியம்மன் திருக்கோயில், விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணைய் நல்லூர், பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திண்டிவனம், வரதராஜப்பெருமாள் திருக்கோயில், சென்னை, ஓட்டேரி, சுந்தரவிநாயகர் திருக்கோயில், கிண்டி, வீர ஆஞ்சநேயர் திருக்கோயில் உள்ளிட்ட 195 திருக்கோயில்களில் திருப்பணிகள் தொடங்குவதற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

மாநில அளவிலான வல்லுநர் குழு பரிந்துரைகளின் அடிப்படையில் திருக்கோயில்களில் திருப்பணிகளுக்கு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு விரைவில் பணிகள் தொடக்கப்படும்.

இக்கூட்டத்தில் ஆகம வல்லுநர்கள் சந்திரசேகர பட்டர், கோவிந்த ராஜப்பட்டர், அங்கீகரிக்கப்பட்ட தகுதி வாய்ந்த ஸ்தபதி முனைவர் கே.தட்சிணா மூர்த்தி, இராமமூர்த்தி தொல்லியல் துறை வடிவமைப்பாளர் முனைவர் டி.சத்திய மூர்த்தி, முனைவர் சீ.வசந்தி, கட்டமைப்பு வல்லுநர் கே.முத்துசாமி உட்பட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில்

# திருப்பூர் மாவட்டத்தின் குடிநீர் திட்டப்பணிகள்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆய்வு மேற்கொண்டார்!

திருப்பூர், நவ. 2 -

தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் திருப்பூர் மாவட்டத்தின் குடி நீர்த் திட்டப்பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் 27.10.2023 வெள்ளிக்கிழமை அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் முன்னிலையில் திருப்பூர் மாவட்டத்தின் குடிநீர்த்திட்டப் பணிகள் குறித்து நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் திருப்பூர் மாவட்டத்தின் குடி நீர்த் திட்டப்பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

அமைச்சர் தெரிவித்ததாவது :தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். எந்தவொரு திட்டமானலும் மக்களுக்கு தேவையான திட்டங்களை உடனடியாக மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில் முழு கவனம் எடுத்து அரசு செயல்பட்டு வருகிறது. திருப்பூர் மாவட்டத்தில் சீரான குடிநீர் பொதுமக்களுக்கு கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டங்கள் மற்றும் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இன்றைய தினம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் திருப்பூர் மாநகராட்சி மற்றும் காங்கேயம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட முத்தூர் பேரூராட்சி, வெள்ள கோவில் ஒன்றியத்திற்குட்பட்ட வள்ளியரச்சல் ஊராட்சி, வெள்ளகோவில் நகராட்சி, காங்கேயம் ஒன்றியம், காங்கேயம், தாராபுரம் சட்டமன்ற தொகுதி, உடுமலைப்பேட்டை ஒன்றியம், குடிமங்கலம் ஒன்றிய கிராம ஊராட்சிகளுக்கு குடிநீர்த்திட்டப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், கிராம ஊராட்சிகளில் வரப்பெறும் புகார்களின் அடிப்படையில் உடனடியாக நேரில் கள ஆய்வு மேற்கொண்டு குடிநீர் வழங்கி வருவதை சம்மந்தப்பட்ட அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும். குடிநீர் இணைப்புகள் பழுது ஏற்படும் போது உடனடியாக சரி செய்து பொதுமக்களுக்கு குடிநீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். குடிநீர் வடிகால் வாரியம் மூலம் வழங்கப்படும் குடிநீர் அளவினை உறுதி செய்து ஒத்திசைவு செய்யும் பொருட்டு, குடிநீர் வடிகால் வாரியம் சம்ப் மூலமாக வழங்கப்படும் அளவினையும், ஊராட்சிகள், குக்கிராமங்களிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் பெறப்படும் குடிநீர் அளவினையும் கண்காணித்து ஆய்வு செய்து, குடிநீர் வடிகால் வாரிய உதவிப் பொறியாளர்கள் மற்றும் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் இணைந்து தினசரி வழங்கப்படும் குடிநீரின் அளவை கண்காணிக்க வேண்டும். தினந்தோறும் மாநகராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மற்றும் கிராம ஊராட்சிகளில் விநியோகிக்கப்படும் குடிநீர் அளவினை மின்னனு நீர்உந்து கருவி (Mechanical meter) பொருத்தி கண்காணித்து சீரான குடிநீர் விநியோகம் தடையின்றி வழங்க வேண்டும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் புதிய குடிநீர்த்திட்டப்பணிகள், மறுசீரமைப்பு பணிகள் உள்ளிட்ட பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் கிடைப்பதை சம்மந்தப்பட்ட அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும். நடைபெற்று வரும் குடிநீர்த் திட்டப்பணிகள் முழுமையாக நிறைவு பெறும் பொழுது அனைத்து பகுதிகளுக்கும் சீரான முறையில் குடிநீர் வழங்க முடியும். இதற்கு சம்மந்தப்பட்ட அலுவலர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றிட அறிவுறுத்தப்படுகிறது என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், மாவட்ட ஊராக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அ.லட்சுமணன், துணை ஆணையர் (மாநகராட்சி) சுல்தானா, வருவாய் கோட்டாட்சியர்கள் ராம்குமார் (திருப்பூர்) (பொ), செந்தில் அரசன் (தாராபுரம்) ஜஸ்வந்த கண்ணன் (உடுமலைப் பேட்டை), தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை பொறியாளர் வினோதன், கண்காணிப்பு பொறியாளர் சுமதி, செயற் பொறியாளர்கள் பரஞ்ஜோதி, கணேசன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர்கள் மாதேஸ்வரன், கண்ணன், ஜான்சன், மீரா, விநாயகம், சர்மிளா, உதவி செயற்பொறியாளர் கிருஷ்ணமூர்த்தி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மதுமிதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) வாணி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### திருப்பூர் வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில்

# மாணவர்களுக்கான பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகள்!

## மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., துவக்கி வைக்கிறார்!

திருப்பூர், நவ. 2-

முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு திருப்பூர் வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் து.கோபிநாத் ஏற்பாட்டில் பி.எஸ்.ஜி. கலைக்கல்லூரி முன்னாள் சேர்மன் செ.திலகராஜ் தலைமையில் நடைபெறும் மாநில அளவிலான பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான பேச்சு மற்றும் கட்டுரை போட்டிகளை திருப்பூர் வடக்கு மாவட்டச் செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., துவக்கி வைத்து வெற்றி பெறும் மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்குகிறார்.

முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு திருப்பூர் வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் நாளை (03.11.2023 வெள்ளிக்கிழமை) திருப்பூர், சங்கீதா திரையரங்கம் எதிரில் அமைந்துள்ள பனிரெண்டார் திருமண மண்டபத்தில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் து.கோபிநாத் ஏற்பாட்டில் பி.எஸ்.ஜி. கலைக்கல்லூரி முன்னாள் சேர்மன் செ.திலகராஜ் தலைமையில் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் ரேவதி அருள்பிகாஷ் மாணவர் அணி விஜய சிம்மராஜா ம.பிரேம்கவின் வரவேற்புரையில் மாவட்ட மாணவரணி அணி துணை அமைப்பாளர்கள் மு.கார்த்திகேயன் க.அசோக்குமார் ரா.டேவிட் இளவரசன் ஆர்.என்.டி. விவேக், மாநகர மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் சபரி நடராஜன், எஸ்சபரீஸ், அ.சூரிய பிரகாஷ், வீ.சதீஸ்குமார், ஐ. மணிகண்டன், வெ.குணா, தெற்கு மாநகர பொருளாளர், மாமன்ற உறுப்பினர் செந்தூர் முத்து, பகுதி கழக செயலாளர் மு.க.உசேன், வட்டக் கழக செயலாளர் பி.தங்கராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் மாநில அவவிலான பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான பேச்சு மற்றும் கட்டுரை போட்டிகளை திருப்பூர் வடக்கு மாவட்டச் செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., துவக்கி வைத்து வெற்றி பெறும் மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்குகிறார். மாநில மாணவர் அணி இணைச்செயலாளர் எஸ். மோகன், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் கா. பொன்ராஜ் கலந்து கொண்டு பரிசுகளை வழங்குகின்றனர். இந்நிகழ்ச்சியில் திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், திருப்பூர் மாநகராட்சி மேயர், திருப்பூர் வடக்கு மாநகர கழக செயலாளர் ந.தினேஷ் குமார், மண்டல தலைவர்கள் சி.கோவிந்தசாமி, ர. கோவிந்தராஜ், வெ.உமாமகேஸ்வரி, கழக சட்டதிட்ட திருதக் குழு உறுப்பினர் இரா.சுப்பையன், மாநில மகளிர் அணி பிரச்சாரக்குழு செ. உமாமகேஸ்வரி, மாநில மகளிர் ஆலோசனைக்குழு மலர் மரகதம், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.முத்துக்குமாரசாமி, பகுதி செயலாளர்கள் மேங்கோ அ.பழனிசாமி, மியாமி ஆ.அய்யப்பன், மின்னல் அ.நாகராசன், கொ.ராமதாஸ், வெ.ஜோதி, போலார் ஆர்.சம்பத்குமார், ப.முருகசாமி, அ.கோவிந்தராஜ், எஸ்.என்.குமார், மாவட்ட அவைத்தலைவர் க.நடராசன், துணைச் செயலாளர்கள் பொங்கலூர் ஒன்றியக்குழு பெருந்தலைவர் வழக்கறிஞர் சு.சுகுமார், டிஜிட்டல் எஸ்.சேகர், வழக்கறிஞர் ஜி.கே.நந்தினி, பொருளாளர் சு.சாமிநாதன், தெற்கு மாநகர அவைத்தலைவர் சிட்டி ப.கணேசன், துணைச் செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர் பி. ஆர்.செந்தில் குமார், பி.பாஸ்கரன், கோ.மகாலட்சுமி, வடக்கு மாநகர அவைத்தலைவர் க.ஈஸ்வரமூர்த்தி, துணைச் செயலாளர்கள் ஆ.ராமசாமி, வே.செங்குட்டுவன், தேவி முருகேசன், பொருளாளர் ஆ.சரவணகுமார் உள்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பளர்கள் பலர் கலந்து கொள்ள உள்ளனர். இறுதியில் மாவட்ட மாணவர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் மு.சக்திவேல், மாணவர் அணி வீ.கௌதம் சிவகுமார் ஆகியோர் நன்றியுரையாற்றுகின்றனர்.

### என்.கௌதமன் தலைமை!

# நாகை மாவட்டம் தி.மு.க. அயலக அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா!

## சுப.வீரபாண்டியன், இ.பரந்தாமன், ப.மீ.யாழினி சிறப்புரை!

நாகை. நவ. 2-

நாகை மாவட்டம் தி.மு.க. அயலக அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கருத்தரங்கம் நாகை லலிதா மஹாலில் நடைபெற்றது. கருத்தரங்கிற்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் தலைமை தாங்கினார். நாகை நகர்மன்ற தலைவரும், நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, மாவட்ட அயலக அணி தலைவர்அ.சாதிக்ஜப்பார், துணைத்தலைவர் ரெ.விஜய கணபதி, துணை அமைப்பாளர்கள் வி.ஏ.சம்பத், ஜவகர்பாட்ஷா, அ.சி.நிஜாம்சேட், பி.ஜி.சக்திராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தார். மாவட்ட அயலக அணி அமைப்பாளர் ரா.சுரேந்தர் வரவேற்றார். விழாவில் திராவிட இயக்க தமிழர் பேரவை பொதுச்செயலாளர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன், கழக சட்டத் துறை இணைச்செயலாரும், எழும்பூர் சட்ட மன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், தி.மு.க. மகளிர் அணி மாநில சமுக வலைதள பொறுப்பாளர் ப.மீ. யாழினி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். கருத்தரங்கில் மாநில விவசாய அணி துணைத் தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராசன், க.ராஜேந்திரன், சீ.க.மறைமலை, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் ஆரூர்.மணிவண்ணன், பொருளாளர் மு. லோகநாதன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் என். சதாசிவம், உதயம் வே.முருகையன், நாகூர் நகரக் கழகச் செயலாளர் எம்.ஆர். செந்தில்குமார், திட்டச்சேரி பேரூர் செயலாளர் எம். முகம்மதுசுல்தான், பொதுக் குழு உறுப்பினர்கள் எம். பன்னீர்செல்வம், உமாசெந்தாமரைசெல்வன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் பி.என்.கார்த்தி, ப.உதயக்குமார், இரா.முருகையன், எஸ்.கே.ஜி.ஏ.சேகர், ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, எஸ்.பால்ராஜ், சி.முகுந்தன், பி.முருகானந்தம், த.தமயந்தி, எஸ்.புவனேஸ்வரி, சாகுல்ஹமீதுராஜா, க.சத்திய மூர்த்தி, எஸ்.சந்தோஷ், வி.கமல், மூ.தினேஷ் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தி.கலையரசன், பன்னீர் செல்வம், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர்கள் திருப்பதி வெங்கடாசலம், சித.கருணாநிதி, இரா.தங்கதுரை, நாகை நகரக் கழக நிர்வாகிகள் ஆர்.ரமணி, பி.திலகர், வெற்றிலை கடை சிவா, எம்.கே.அபுபக்கர், கே.சித்ராகுலோத்துங்கன், மற்றும் ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட அயலக அணி துணைஅமைப்பாளர் ஆர். கே.பிரதீப் நன்றி கூறினார்.



நாகை மாவட்டம் திருக்குவளை அண்ணா பொறியியல் கல்லூரி பட்டம் அளிப்பு விழாவிற்கு சென்ற உயர்கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி திருக்குவளையில் கலைஞர் பிறந்த வீட்டில் வைக்கப்பட்டுள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இல.மேகநாதன், உயர்கல்வித் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர் சோமாஸ்கந்தன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் சோ.பா.மலர்வண்ணன், மகா.குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் இல.பழனியப்பன், கோ.சிவக்குமார் ஆகியோர் உள்ளனர்.




நாகை மாவட்ட தி.மு.க. அயலக அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நாகை லலிதா மஹாலில் நடைபெற்ற கருத்தரங்கில் திராவிட இயக்க தமிழர் பேரவை பொதுச்செயலாளர் சுப.வீரபாண்டியன் சிறப்புரையாற்றினார். உடன் கழக சட்டத்துறை இணைச்செயலாளரும், எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான இ.பரந்தாமன், தி.மு.க. மகளிர் அணி மாநில சமுக வலைதள பொறுப்பாளர் ப.மீ.யாழினி, நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராசன், க.ராஜேந்திரன், சீ.க.மறைமலை, மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், துணைச் செயலாளர்ஆரூர் மணிவண்ணன், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, அயலக அணி அமைப்பாளர் ரா.சுரேந்தர் மற்றும் பலர் உள்ளனர்.

### நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., தலைமை!

# மயிலாடுதுறை மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் கபடி போட்டி!

### அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் - குத்தாலம் பி.கல்யாணம் - செ.இராமலிங்கம் பங்கேற்பு!

நாகை, நவ.2-

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாநில அளவிலான கபடி போட்டி குத்தாலம் ராஜ் வித்யாலாயா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. குத்தாலம் வடக்குஒன்றியச் செயலாளர் கு.வைத்திய நாதன் வரவேற்றார். மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராம லிங்கம், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் கி.சத்தியசீலன், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உமாமகேஸ் வரிசங்கர், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், அரசு வழக்கறிஞர் இராம.சேயோன்,மயிலாடுதுறை மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் க,அறிவுச் செல்வன், துணை அமைப்பாளர்கள் கே.செந்தில்குமார், எஸ்.ஜீவானந்தம், ஆர்.மனோவாசாம்சன், வி.கலைச்செல்வன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவிற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கி பரிசுகளை வழங்கி சிறப்புரையாற்றினார். விழாவில் சுற்றுசூழல், காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் போட்டிகளை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். விழாவில் மாவட்டக் கழக நிர்வாகிகள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் செல்லசேதுரவிக்குமார், மூவலூர் எம்.மூர்த்தி, என்.இளையபெருமாள், மஞ்கை எம்.சங்கர், ஞான.இமையநாதன், ப.முருகமணி, ஏ.ஆர்.ராஜா, பொதுக் குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், அ.காந்தி, நத்தம் வின்செண்ட், எஸ்.வெற்றிவேல், பி.சிவதாஸ், ஹர்சத், மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.அன்புச்செழியன், என்.அண்ணாதுரை, குத்தாலம் ஒன்றியக் குழு தலைவர் கே.மகேந்திரன், குத்தாலம் பேரூராட்சி தலைவர் சங்கீதாமாரியப்பன், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் எம்.கே.மருது, .வி.எஸ்.என்.செந்தில்ஆர்.சாந்தி, ராஜ்குமார், எஸ்.ஏ.சாதிக் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

முடிவில் குத்தாலம் பேரூர் செயலாளர் எம்.சம்சுதீன் நன்றி கூறினார்.

### செஞ்சி ஒன்றியம் நல்லான் பிள்ளை பெற்றால் ஊராட்சியில்

# ‘நீட் விலக்கு நம் இலக்கு’ டிஜிட்டல் கையெழுத்து இயக்கம்!

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

செஞ்சி, நவ. 2-

ஏழை எளிய அரசுப் பள்ளி மாணவர்களின் மருத்துவ கனவை சிதைக்கும் நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு கோரும் மசோதாவிற்கு விரைந்து ஒப்புதல் வழங்க வலியுறுத்தி இந்திய குடியரசுத் தலைவருக்கு 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்துக்கள் பெற்று கடிதம் அனுப்புவதற்காக கழக இளைஞர் அணி, மாணவரணி, மருத்துவ அணி சார்பில் கையெழுத்து பெறும் நிகழ்ச்சியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில் தொடங்கி வைத்தார்.

இதையடுத்து விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் செஞ்சிஒன்றியம் நல்லான் பிள்ளை பெற்றால் ஊராட்சியில் நீட் விலக்கு நம் இலக்கு மாபெரும் டிஜிட்டல் கையெழுத்து இயக்கம் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த் தலைமை தாங்கினார்.செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர்விஜயகுமார் முன்னிலை வகித்தார் முன்னாள் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளரும் மாவட்ட பிரதிநிதி கதிரவன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளரும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்துகொண்டுநீட் விலக்கு நம் இலக்கு மாபெரும் டிஜிட்டல் கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தார்.

நிகழ்சியில் செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன், மாவட்ட கவுன்சிலர் அகிலா பார்த்திபன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ரஞ்சித் குமார், மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை, நிர்வாகிகள் ஸ்டீபன் ராஜ், பாண்டியன், இளங்கோவன், வெங்கடேசன், காசிநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## டி.என். பாபு (எ) இளவழகன்

**நவம்பர் 2 (2003)**



நீதிக்கட்சியைத் தொடர்ந்து கழகத்தில் பணியாற்றிய தனது தந்தையின் வழியொட்டி, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

1979 முதல் 2003 வரை திருவண்ணாமலை நகரக் கழகச் செயலாளராக தொடர்ந்து 24 ஆண்டுகள் பொறுப்பு வகித்தவர்.

1986 முதல் 1990 வரை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கற்பகம் கூட்டுறவு மொத்த பண்டக சாலை தலைவராகவும், திருவண்ணாமலை நகர கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக மிசா கைதியாக 48 நாட்களும்; 1986ல் நடைபெற்ற மொழிப் போராட்டத்தில் பங்கேற்று 45 நாட்கள் சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## பூவிருந்தவல்லியில் பாக முகவர்கள் கூட்டம்

திருவள்ளூர், நவ. 2 –

திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி சட்ட மன்ற தொகுதி பாக முகவர்கள் ஆலோசனை கூட்டம் சென்னேரிகுப்பத்தில் தனியார் திருமண மண்டபத்தில் ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தல் பணிகள் குறித்து திருவள்ளூரில் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற உள்ள பாக முகவர் கூட்டத்தில் பங்கேற்பது குறித்தும் பாகமுகவர்கள் வாக்காளர்களை சந்தித்து, கழகத்தின் செயல்பாடுகள் குறித்து பல்வேறு ஆலோசனை வழங்கினார். கூட்டத்தில் தொகுதி பார்வையாளர் பழ.கணேசன், மாணவர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு மாவட்ட நிர்வாகிகள் ம.இராஜி, வி.ஜெ.சீனிவாசன், காயத்ரி ஸ்ரீதர், எஸ்.ஜெயபாலன், பா.நரேஷ்குமார், த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், எம்.முத்து தமிழ்செல்வன், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், வி.குமார், மாநகர ஒன்றிய நகர செயலாளர்கள் சன்.பிரகாஷ், டி.தேசிங்கு, ஜி.ஆர்.திருமலை, ஆர்.ஜெயசீலன், சே.பிரேம்ஆனந்த், தி.வே.முனுசாமி, தங்கம்முரளி உள்பட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### காட்சி ஊடகங்களின் செய்தி வாசிப்பாளர்கள் - நிகழ்ச்சித் தொகுப்பாளர்களுக்கு

# 2022 ஆம் ஆண்டிற்கான - சிறந்த தமிழ் உச்சரிப்பு விருது!

### செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் - நால்வருக்கு வழங்கினார்!

சென்னை, நவ.2-

ஊடகங்களில் பணிபுரியும் செய்தி வாசிப்பாளர்கள், நேர்காணல் செய்பவர்கள், நிகழ்ச்சித் தொகுப்பாளர்களுக்கென கழக அரசின் சார்பில் ‘சிறந்த தமிழ் உச்சரிப்பு விருது’ அறிவிக்கப்பட்டது அறிவோம்!

2022 ஆம் ஆண்டிற்கான - ‘சிறந்த தமிழ் உச்சரிப்புக்கான’ இவ்விருதினை, செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், நேற்று முன்தினம் - காட்சி ஊடகங்களில் பணிபுரியும் நால்வருக்கு வழங்கி சிறப்புச் சேர்த்தார்.

அதன் விபரம் வருமாறு:

தமிழ் வளர்ச்சித் துறையின் 2022-2023ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதனால் சட்டமன்றப் பேரவையில் 19.04.2022 ஆம் நாளன்று பின்வருமாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது.

“ஊடகங்களில் தமிழ்ச் செய்திகளைத் தவறில்லாமலும், அழகாகவும், சரியாகவும் உச்சரிக்கும் செய்தி வாசிப்பாளர்கள், நேர்காணல் செய்பவர்கள் மற்றும் நிகழ்ச்சித் தொகுப்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுக்கு நான்கு பேரைத் தெரிவு செய்து அவர்களைப் பாராட்டி ஒவ்வொருவருக்கும் ரூ.25,000/- பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும். மேலும் அனைத்து காட்சி ஊடகங்களுக்கும் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வாயிலாக தமிழ் சிறப்பு வகுப்புகள் நடத்தப்படும்” என அறிவிக்கப் பெற்றது.

அவ்வறிவிப்பிற்கிணங்க, 10.10.2023ஆம் நாளன்று செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் தமிழ் ஒலிப்பு சிறப்பு வகுப்புகள் கலைவாணர் அரங்கத்தில் மிகச்சிறப்பாக நடத்தப்பெற்றது.

2022 ஆம் ஆண்டிற்கான சிறந்த தமிழ் உச்சரிப்புக்கான விருதாளர்களைத் தேர்வு செய்ய ஏதுவாக அனைத்து காட்சி ஊடக நிறுவனங்களிடமிருந்து ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களைப் பற்றிய குறிப்புகளுடன், “மை அணலில் பற்றிய அணுப் போன்ற அனலால் அனு வெந்து போனது; அணுக் கத்தார் அனுக்கம் என்றும் தொல்லை அண்ணத்தில் அன்னம் படலாம்; கன்னம் படலாமா? கன்னி அணிந்த கண்ணி காணத்தில் வந்ததா? கானத்தில் சேர்ந்ததா? அலம் பிடித்தால் அளம் வருமோ? அளைக்குள்ளே புகுந்த அலை அழைத்து வருமோ? கறையானை அவள் அல்லில் செய்த அவலை அள்ளி எடு, ஒலியும் ஒளியும் ஒழிந்து போனால் ஒள் உள தாகுமோ?. கழகத்தார் ஆடும் கழங்கு கலகம் விளைக்குமா? களங்கம் தருமா? அரம் கொண்டு அறம் அரியலாமா? அரியை அறியா அரிவை அருவை அறுத்த இறவியன்றோ? ஒருத்தலை ஒறுத்து ஒருவினால் ஒறுவு இலதாகுமோ?. தமிழுக்குக் கரையில்லை கறுப்பென்பது கறையுமில்லை

போன்ற நா பிறழ் தொடர்களை உச்சரித்து அதனை காணொலியாக பெறப்பட்டு 12.10.2023 அன்று கூடுதல் இயக்குநர் (செய்தி) அவர்களின் அறையில் தேர்வுக்குழுவின் முன் காட்சிப்படுத்தப்பட்டது.

இவ்விருதிற்கென 23 நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட 88 வீடியோ நறுக்குகள் தேர்வுக் குழுவினரால் கேட்கப்பட்டு அவற்றில் சிறந்த தமிழ் உச்சரிப்பாளர் விருதுக்குத் தகுதியானவர்களாக திருமதி. திவ்யா நாதன், திருமதி. சுஜாதா பாபு, திருமதி. பொற்கொடி மற்றும் கா.செல்வக்குமார் ஆகிய நான்கு ஊடகவியலாளர்கள் தெரிவு செய்யப் பெற்றுள்ளனர்.

சென்னை, தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (31.10.2023) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், திருமதி. திவ்யா நாதன், திருமதி. சுஜாதா பாபு, திருமதி. பொற்கொடி மற்றும் கா.செல்வக்குமார் ஆகிய நால்வருக்கும் 2022ஆம் ஆண்டிற்கான சிறந்த தமிழ் உச்சரிப்பு விருதினை வழங்கினார்.

விருதாளர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.25,000/-க்கான காசோலையும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கிச் சிறப்பிக்கப்பெற்றது.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் மருத்துவர் இரா. செல்வராஜ், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### வணிகர்களுக்கான

# சமாதானத் திட்டம் - 2023 விழிப்புணர்வுக் கூட்டம்!

### வணிகவரி - பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது!

சென்னை, நவ. 2-

மதுரை, திருநெல்வேலி, திருச்சி மற்றும் விருதுநகர் கோட்டங்களைச் சார்ந்த வணிகர்களுக்கான “சமாதானத் திட்டம் - 2023 விழிப்புணர்வு மற்றும் திட்ட விளக்கக் கூட்டம்” வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

மதுரையில் உள்ள துவாரகா பேலஸ் அரங்கில் நேற்று முன்தினம் (31.10.2023) வணிகவரித் துறை சார்பாக வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் மதுரை, திருநெல்வேலி, திருச்சி மற்றும் விருதுநகர் கோட்டங்களைச் சார்ந்த வணிகர்களுக்கான “சமாதானத் திட்டம்- 2023 விழிப்புணர்வு மற்றும் திட்ட விளக்கக் கூட்டம்” நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 4 வணிகர்களுக்கு வரி நிலுவை தீர்வு செய்து ஆணைகள் மற்றும் மதுரை (2) திருச்சி (4) திருநெல்வேலி (2) விருதுநகர் (2) கோட்டங்களைச் சார்ந்த 10 வணிகர்களுக்கு வரி நிலுவை தள்ளுபடி (ரூ.50,000/.க்கு கீழ் உள்ள நிலுவைகள்) ஆணைகளையும் அமைச்சர் வழங்கி பேசியதாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வணிகர்கள் நலனுக்காக எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாட்டில் ஏறத்தாழ 25 ஆயிரம் கோடி அளவில் வணிகவரி நிலுவையில் உள்ளது. நிலுவைத் தொகை செலுத்துவதில் சலுகை வழங்க வேண்டும் என முதலமைச்சர் அவர்களிடத்தில் வணிகர்கள் கோரிக்கை வைத்து வந்தனர்.

தமிழ்நாட்டில் வணிகர்களின் சுமையை குறைக்கும் வகையில் வரி நிலுவையை எளிய முறையில் வசூலிக்கும் சமாதான திட்டத்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதன் முதலில் அறிமுகப்படுத்தினார். அவர்கள் வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தற்போது ரூ.50,000-க்கு கீழ் உள்ள நிலுவைத் தொகைக்கான வணிக வரி, வட்டி, அபராதத் தொகை முற்றிலும் தள்ளுபடி செய்யப்படும் என அறிவித்துள்ளார்கள்.

இதன்மூலம் 95 ஆயிரம் சிறு வணிகர்கள் பயன்பெறுவார்கள். மேலும் ரூ.10 லட்சம் வரி நிலுவை வைத்துள்ள வணிகர்கள் 20 சதவிகித வரியை செலுத்தினால் போதும் எனவும் அறிவித்துள்ளார்கள். இந்த அறிவிப்பின் மூலம் தமிழ்நாட்டில் வணிகர்கள்சுமார் ரூ. 20 ஆயிரம் கோடி அளவில் வரிச்சலுகை பெற்று பயன் பெறுவார்கள். வணிகர்களின் கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள இந்த அறிவிப்பு, வரலாற்று சிறப்பு மிக்க அறிவிப்பு.

மேலும், வணிகர்கள் செலுத்தும் வரித்தொகைக்கான சான்றிதழ் உடனடியாக வணிகர்களுக்கு வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோல் வருகின்ற நவம்பர் 6-ஆம் தேதி சென்னை மண்டலத்திலும், 7-ஆம் தேதி கோயம்புத்தூர் மண்டலத்திலும் வணிகர்களுக்கான “சமாதானத் திட்டம் - 2023 விழிப்புணர்வு மற்றும் திட்ட விளக்கக் கூட்டம் நடைபெற உள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு எப்போதும் வணிகர்கள் நலனை பாதுகாக்கின்ற, அவர்களுக்கு உற்ற துணையாக செயல்படுகின்ற அரசாக விளங்கும் என வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பேசினார்.

இந்நிகழ்ச்சியில், அரசு செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை திருமதி. பா.ஜோதி நிர்மலாசாமி, வணிக வரித்துறை ஆணையர் முனைவர் டி.ஜகந்நாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங்கீதா, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர். ஆ.வெங்கடேசன், வணிகவரித்துறை கூடுதல் ஆணையர் அ.பா.தேவேந்திர பூபதி, இணை ஆணையர் மதுரை கோட்டம் மா.இரவி, வணிகவரித்துறை உயர் அலுவலர்கள் மற்றும் ஏராளமான வணிகர்கள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் நல்லான்பிள்ளை பெற்றால் ஊராட்சியில் “நீட் விலக்கு நம் இலக்கு” டிஜிட்டல் கையெழுத்து இயக்கத்தை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த் உள்ளனர்.

## 86 மருத்துவப் பணியிடங்களுக்கு கலந்தாய்வு!

### ஒன்றிய அமைச்சருக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் கடிதம்!

சென்னை, நவ.2-

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஒன்றிய அரசு சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர்.மான்சுக் மாண்டாவியா அவர்களுக்கு எழுதிய நேர்முக கடிதத்தின் அடிப்படையில் 86 எம்.பி.பி.எஸ். இடங்களுக்கு கலந்தாய்வு நடத்தி நிரப்பப்படும்.

தமிழ்நாட்டில் எம்.பி.பி.எஸ். பட்டப்படிப்பில், அகில இந்திய ஒதுக்கீட்டில் 16 மருத்துவ இடங்களும், நிகர்நிலை பல்கலைக்கழகத்தில் 50 மருத்துவ இடங்களும், மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையில் 3 மருத்துவ இடங்களும், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகத் திற்குட்பட்ட சுயநிதி மருத்துவக் கல்லூரிகள் 17 மருத்துவ இடங்களும் காலியாக உள்ளன. காலியாக உள்ள மருத்துவ இடங்களுக்கு 31.10.2023 முதல் 07.11.2023 வரை அகில இந்திய கலந்தாய்வு நடைபெறும், மற்றும் மாநில ஒதுக்கீட்டிற்கான கலந்தாய்வு 07.11.2023 முதல் 15.11.2023 வரை நடைபெறும்.

எனவே மாணவர்கள் tnmedicalselection.org என்ற இணையதளத்தை தொடர்ந்து பார்வையிடுமாறு தேர்வுக் குழு செயலாளர் மரு.அருணலதா தெரிவித்தார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் மாலை (31.10.2023) தலைமைச் செயலகத்தில், அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

### 50 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு! சென்னையில்

# சிங்கப்பூர் நிறுவன சர்வதேச தொழில்நுட்பப் பூங்கா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, நவ. 2 -

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.10.2023) சென்னை, பல்லாவரம் ரேடியல் சாலையில், சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த கேப்பிட்டாலாண்ட் (Capitaland) குழுமத்தின் துணை நிறுவனமான ரேடியல் ஐ.டி. பார்க் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் (Radial IT Park Private Limited), 50,000 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் 5 மில்லியன் சதுர அடி பரப்பளவில் அமைத்து வரும் தொழில்நுட்ப பூங்காவில், முதற்கட்டமாக 1.3 மில்லியன் சதுர அடி பரப்பளவில் அமைத்துள்ள சர்வதேச தொழில்நுட்ப பூங்காவை (International Tech Park) திறந்து வைத்தார்.

அனைவரையும் உள்ளடக்கிய பரவலான வளர்ச்சி என்ற தமிழ்நாடு அரசின் கொள்கையின் அடிப்படையில், கிராமப் புறங்களைச் சார்ந்த, படித்த இளைஞர்களுக்கு அவர்கள் வசிக்கும் மாவட்டங்களுக்கு அருகிலேயே அதிக எண்ணிக்கையிலான உயர்தர வேலைவாய்ப்புகளை உருவாக்கி, அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

அதன்படி, விழுப்புரம், திருப்பூர், வேலூர், தூத்துக்குடி, தஞ்சாவூர் மற்றும் சேலம் ஆகிய இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் 50,000 சதுர அடி முதல் 1,00,000 சதுர அடி பரப்புள்ளதாக, மினி டைடல் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மேலும், உதகமண்டலத்தில் புதுமையான அம்சங்களுடன் ஒரு மினி டைடல் பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கையும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**கேப்பிட்டாலாண்ட் (Capitaland) குழுமம்**

ஆசியாவின் மிகப்பெரிய வணிக குழுமங்களில் ஒன்றான கேப்பிட்டாலாண்ட் குழுமம், பல நாடுகளில், முப்பதுக்கும் மேற்பட்ட சில்லறை வணிகம், அலுவலக வளாகங்கள், தங்கு மிடங்கள், வணிகப் பூங்காக்கள், போக்குவரத்து மேலாண்மை மற்றும்தரவுமையங்களை நிறுவியுள்ளது.

முன்னதாக அசென்டாஸ் (Ascendas) என அறியப்பட்ட கேப்பிட்டாலாண்ட், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்துடன் இணைந்து கூட்டு முயற்சியில் முதல் தனியார் தகவல் தொழில்நுட்ப வணிகப் பூங்காவை சென்னையில் தொடங்கியது குறிப்பிடத்தக்கது.

இக்குழுமம் சென்னை தரமணி யில் சர்வதேச தொழில்நுட்ப பூங்கா, செங்கல்பட்டு, மஹிந்திரா வேர்ல்ட் சிட்டியில் சைபர்வேல் (CyberVale) மற்றும் சென்னை, பல்லாவரம் ரேடியல் சாலையில் நேற்று முன்தினம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட சர்வதேச தொழில்நுட்ப பூங்கா என மூன்று வணிக பூங்காக்களைக் கொண்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செய லாளர் வி.அருண்ராய்,

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர.ராகுல்நாத், கேப்பிட்டாலேண்ட் இன்வெஸ்ட்மென்ட் நிறுவனத்தின் தலைவர் மிகுவல் கோ, கேப்பிட்டாலேண்ட் இன்வெஸ்ட்மென்ட் இந்தியா நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் சஞ்சீவ் தாஸ்குப்தா, இந்திய வணிகப் பூங்காக்கள் நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் கவுரி சங்கர் நாகபூஷணம், சென்னை செயல்பாடுகள் தலைவர் சி. வேலன், மிட்சுபிஷி எஸ்டேட் நிறுவனத்தின் செயல் அலுவலர் மாசநோரி இவாசே மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சுதந்திரப் போராட்ட தியாகி என்.சங்கரய்யாவுக்கு கௌரவ டாக்டர் பட்டம்!

## ஆளுநர் தனது முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும்!

### கல்லூரி ஆசிரியர் கூட்டு நடவடிக்கைக் குழு வலியுறுத்தல்!

சென்னை, நவ. 1-

சுதந்திரப் போராட்ட தியாகி என். சங்கரய்யா அவர்களுக்கு கௌரவ டாக்டர் பட்டமளிக்கும் ஒப்புதலில் கையெழுத்திட மறுத்துள்ள தமிழக ஆளுநர் அவர்கள் தனது முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென கல்லூரி ஆசிரியர் கூட்டு நடவடிக்கைக் குழு கேட்டுக் கொள்கிறது.

இது குறித்து கல்லூரி ஆசிரியர் கூட்டு நடவடிக்கைக் குழு ஒருங்கிணைப்பாளர் சோ.சுரேஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

விடுதலைப் போராட்டக் காலத்தில் 5 ஆண்டுகள் சுதந்திர இந்தியாவில் எளிய மக்கள் வாழ்வு ஏற்றமுற, 4 ஆண்டுகள் சிறை வாழ்க்கையை அனுபவித்தவர் என்.சங்கரய்யா அவர்கள் விடுதலை வேட்கையின் காரணமாக வகுப்பை புறக்கணித்தால், தேர்வெழுத முடியாமல், பட்டப்படிப்பை தொடர முடியாத சூழலுக்கு உள்ளானவர். வாழும் வரலாறாக, ஒப்பில்லா சமூக களப் பேராளியாக, இளைஞர்களின் போற்றத்தக்க முன்மாதிரியாக திகழும் நூற்றாண்டுகளைக் கடந்த மகத்தான சுதந்திர போராட்ட தியாகிக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்க வேண்டுமென தமிழக முதல்வர் பரிந்துரைத்ததன் அடிப்படையில், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் சனநாயக அமைப்புகளான செனட் மற்றும் சிண்டிகேட் ஆகியவை ஒருமனதாக, என். சங்கரய்யா அவர்களுக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி, ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டதை, தமிழக ஆளுநர் அவர்கள் கையெழுத்திட மறுத்திருப்பது வருந்தத்தக்கது. 80 ஆண்டுகளாக சாதாரண ஏழை, எளிய மக்களின் துயரைப் போக்க ஓயாத குரலில் ஒலித்துக் கொண்டிருக்கும் என். சங்கரய்யா அவர்களுக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்குவதன் மூலம் மதுரை காமராசர் பல்கலைக் கழகம் வரலாற்றில் ஒரு நீங்கா புகழை நிச்சயம் பெறும்.

எனவே, தமிழக ஆளுநர் அவர்கள் தனது முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென கல்லூரி ஆசிரியர் கூட்டு நடவடிக்கை குழு சார்பாக கனிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 2023நவம்பர் மாதம் 17ஆம் தேதி முதல் 26ஆம் தேதி வரை போர்ச்சுக்கல் நாட்டில் நடைபெற உள்ள வாகோ உலக கிக்பாக்சிங் (சீனியர் & மாஸ்டர்) போட்டியில் இந்தியா சார்பில் கலந்துகொள்ள உள்ள தமிழ்நாட்டைச் சார்ந்த 8 வீர – வீராங்கனைகளுக்கு விமானக் கட்டணம், தங்குமிட செலவினம் மற்றும் போட்டிக்கான நுழைவுக் கட்டணமாக தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் நிதியுதவியாக தலா ரூபாய் 1.50 இலட்சம் வீதம் ரூபாய் 12 இலட்சத்திற்கான காசோலைகளை நேற்று முன்தினம் (31.10.2023) சென்னை முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி, உடனுள்ளனர்.







பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் தமிழ் இணையக் கல்விக் கழகம்!

# இடம் பொருள் கலைஞர் 42







# தமிழ் இணையக் கல்விக் கழகம்

## உலகத் தமிழர்களை இணைக்கும் பல்கலை!

*1999*-ஆம் ஆண்டு பிப்ரவரி. உலகம் தமிழ்நாட்டைத் திரும்பிப் பார்த்த முக்கிய நிகழ்வு நடைபெற்றது. **'தமிழ்நெட்-99'** என்ற தலைப்பில், இரண்டு நாள் தமிழ் இணையம் தொடர்பான மாநாடு சென்னையில் நடைபெற்றது.

உலகம் முழுவதிலும் இருந்து தமிழறிஞர்கள், மென்பொறியாளர்கள், தகவல்தொழில்நுட்ப வல்லுநர்கள் எனப் பலர் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் கணினியில் தமிழ் விசைப்பலகையைத் தரப்படுத்துதல், பல்லூடக பயன்பாடுகளில் தமிழைச் செயல்படுத்துதல் உள்ளிட்ட பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. அப்போது பேசிய சாம் பிட்ரோடா போன்ற அறிஞர்கள், 'தமிழைப் பொருளாதார மொழி ஆக்குவதற்கு உலக அங்கீகாரம் வேண்டும். அதனைப் பெற தமிழ், பரவலாகப் பயன்படுத்தக் கூடிய மொழியாக வேண்டும். தமிழ் இணையம் ஆக்கப்பூர்வமாகச் செயல்பட்டால், தமிழ் நிச்சயமாக உலக உபயோக மொழியாக உருவாகும்' என்று குறிப்பிட்டார்கள்.

அதைத் தொடர்ந்து, 'வருங்காலத்தில் கணிப்பொறியிலும் இணையத்திலும் ஏற்படும் புரட்சிகரமான பலவித வளர்ச்சிகளுக்கு இணையாக, தமிழ் மொழியைச் செயல்படுத்த உள்ள வாய்ப்புகளை நிறைவேற்ற, தீவிர ஆய்வுகளை உடனடியாக உலகளவில் மேற்கொள்ள வேண்டும். இதற்காக தமிழ்நாட்டில் ஒரு குறிப்பிட்ட தமிழ் இணைய நிறுவனத்தையும், உலகளவில் ஒரு தமிழ் இணைய வகைத் தொடர்பு அமைப்பையும் உருவாக்க வேண்டும்' என்று முடிவெடுக்கப்பட்டது.

### பரவும் தமிழ், அறிவியல் தமிழ்

அந்தத் திட்டத்துக்குச் செயல்வடிவம் கொடுக்கும்விதமாக, அந்த மாநாட்டிலேயே, 'வெளிநாட்டில் இருப்பவர்களும் தமிழ் பயில்வதற்காக ஒரு 'விர்ச்சுவல் யூனிவர்சிட்டி'யை (மெய்நிகர் பல்கலைக்கழகம்) இணையத்தின் மூலம் துவக்கலாம் என்று முடிவு செய்திருக்கிறோம். **'உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம்'** என்று அதற்கு உங்கள் அனுமதியோடு பெயர் சூட்டுகிறேன்' என்று அறிவித்தார் முத்தமிழறிஞர் கலைஞர்.

அறிவிப்பு வந்தவுடனேயே ஆக்கப்பணிகள் தொடங்கப்பட்டன. இதன் தோற்றத்துக்கு ஆலோசனைகள் வழங்கிட, அன்றைய தமிழ்நாடு மாநில உயர்கல்விக் குழுத் துணைத் தலைவராக இருந்த முனைவர் மு.அனந்தகிருஷ்ணன் தலைமையில், 1999-ஆம் ஆண்டு மார்ச் 5 அன்று ஓர் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது. அதற்குப் பிறகு அதே ஆண்டு ஆகஸ்ட் 19 அன்று, தமிழ் இணையப் பல்கலைக்கழகத்துக்காக WWW. tamilvirtualuniv.org என்ற இணைய தளப் பெயர் பதிவு செய்யப்பட்டது.



அதைத் தொடர்ந்து, உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் அமைப்பது குறித்து ஆராய்ந்து, அரசுக்கு அறிக்கை வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டு, அந்தப் பணியை அண்ணா பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் வ.செ.குழந்தைசாமி அவர்கள் தலைமையில், செப்டம்பர் 6 அன்று ஓர் உயர்மட்டக் குழுவை அமைத்தது, கழக அரசு.

ஒன்றிய அரசில் அமைச்சராக இருந்த முரசொலி மாறன் அவர்களும் மேற்கண்ட குழுக்களுடன் தன் சிந்தனைகளைப் பகிர்ந்துகொண்டு 'தமிழ் பரவுவது மாத்திரமல்ல, அது அறிவியல் தமிழாகவும் இருக்க வேண்டும்' என்று வலியுறுத்தினார்.

### தமிழர்களை இணைக்கும் பல்கலைக்கழகம்

தொடர்ந்து 2001-ஆம் ஆண்டு பிப்ரவரி 17 அன்று, தமிழ் இணையப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. அப்போது பேசிய கலைஞர், "சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்" என்ற இந்த வாசகத்தை நாங்கள் எங்கள் கட்சியின் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிடுவது வழக்கம். ஆனால், இதிலே ஒரு வேறுபாடு, சொன்னதைச் செய்வோம் என்பது மாத்திரமல்ல. சொல்லாததையும் செய்திருக்கிறோம். தேர்தல் அறிக்கையிலே சொல்லப்படாததையும் செய்திருக்கிறோம். அதுதான் இந்தப் பல்கலைக் கழகம்" என்றார்.

அந்த சமயத்தில், தமிழ்நாட்டில் மட்டும் ஏறத்தாழ 6 கோடிக்கும் மேற்பட்ட தமிழர்கள் இருந்தனர். இலங்கை, மலேசியா, ரீயூனியன், இங்கிலாந்து, ஆப்பிரிக்கா, பர்மா, சிங்கப்பூர், கனடா, ஃபிரான்ஸ், மொரீசியஸ், ஆஸ்திரேலியா, வளைகுடா நாடுகள், கயானா, ஃபிஜி தீவு, செஷல்ஸ் உள்ளிட்ட இதர நாடுகளில் இருந்த தமிழர்களின் எண்ணிக்கை சுமார் 1 கோடிக்கும் அதிகமாக இருந்தது. எனவே இது, **'உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம்'** என்று பெயர் பெற்றிருப்பதைவிட, அதற்குள்ள பொருள் என்னவென்றால், உலகத் தமிழர்களை இணைக்கும் பல்கலைக்கழகம்' என்றார் கலைஞர்.

### எச்சமாக நின்று வாழும்!

கலைஞர் மேலும் தன் உரையில், "இன்று விஞ்ஞான உலகத்திலே இந்த சாஃப்ட்வேருக்கு, கம்ப்யூட்டருக்கு, இந்த இணையத்திற்கு ஒரு தலையாய இடம் ஏற்பட்டுவிட்டது. அந்தத் தலையாய இடத்தை இந்தியாவைப் பொறுத்தவரையில் இப்போது தமிழகம்தான் பெற்றிருக்கிறது என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்வேன். வேறு எந்த மாநிலத்திலும் தமிழகத்திலே வளர்ந்துள்ள அளவிற்கு இந்தத் தொழில்நுட்பம் வளரவில்லை.

எனக்குப் பெருமகிழ்ச்சி என்னவென்றால், இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தொழிலை மாத்திரம் வளர்க்கவில்லை, தமிழையும் வளர்க்கிறோமே என்பதுதான். **வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்** என்பது நான் அடிக்கடி சொல்லி வருகின்ற சூளுரை. அந்த சூளுரைக்கேற்ப, தமிழ் இணையப் பல்கலைக்கழகம் நமக்கெல்லாம் எச்சமாக நின்று வாழ்க!" என்று வாழ்த்தினார்.

சென்னை, கோட்டூர்புரம் காந்தி மண்டப சாலையில் அண்ணா நூற்றாண்டு நூலகம், மெட்ராஸ் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ் ஆகியவற்றுக்கு அருகில் அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் தற்போது 'தமிழ் இணையக் கல்விக் கழகம்' என்ற பெயரில் இந்தப் பல்கலைக்கழகம் செயல்பட்டு வருகிறது. உலகம் முழுவதும் உள்ள தமிழர்களுக்கும், தமிழ் மொழியைக் கற்க விரும்பும் இதர மொழியினருக்கும் மழலைக் கல்வி, சான்றிதழ், பட்டயம், மேற்பட்டயம், பட்டம் எனப் பல கட்டமாகத் தமிழ் மொழி இணையம் மூலம் கற்பிக்கப்பட்டு வருகிறது.

***கலைஞர் வாழ்கிறார்... தமிழ் வளர்கிறது..!***

**...வலம் வருவோம்**

தற்போது இந்தத் தமிழ் இணையக் கல்விக் கழகம் www.tamilvu.org என்ற இணையதளப் பெயரில் இயங்கி வருகிறது. இதில் தமிழின் செவ்விலக்கியங்கள், தமிழ் இலக்கண விதிகள், தமிழ் இணைச்சொல் அகராதி, பிழை திருத்தும் வசதி, மின் அஞ்சல், கையெழுத்து உணர்தல், ஒலி உணர்தல், எழுத்துரு உணர்தல், ஓலைச்சுவடிகளை அறிதல் போன்ற பல வசதிகள் உள்ளன.

மேலும், tamildigitallibrary.in என்ற தளத்தில் அற்புதமான மின்னூலகம் ஒன்றையும் தமிழ் இணையக் கல்விக் கழகம் நடத்தி வருகிறது. இங்கு அரிய தமிழ், ஆங்கில நூல்கள், பருவ இதழ்கள், கீழடி உள்ளிட்ட தொல்லியல் அகழாய்வு தொடர்பான தகவல்கள் போன்ற பல தகவல்கள் கொட்டிக் கிடக்கின்றன. இவற்றை எந்தக் கட்டணமும் இல்லாமல் பயன்படுத்த முடியும் என்பது கூடுதல் சிறப்பு.

## வாசிப்புப் பழக்கம் உருவாக்குவோம்!




மாணவர்களிடம் நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகிறது வாசிப்புப் பழக்கம். மீண்டும் அதற்குப் புத்துயிர் அளிக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். அதை எப்படியெல்லாம் செய்யலாம், மக்களிடம் எப்படிப் பேரியக்கமாகக் கொண்டுச் செல்லலாம் என்பதற்கு வழிகாட்டி நூலாக வெளிவந்துள்ளது **'வாசிப்புப் பேரியக்கம்'** என்கிற இந்தச் சிறுநூல்.

குழந்தைகளுக்கான சிறார் படைப்புகளைத் தொடர்ந்து எழுதிவரும் விழியன் மற்றும் விஷ்ணுபுரம் சரவணன் ஆகியோர் கூட்டாக எழுதியுள்ள இந்நூலினை 'புக்ஸ் ஃபார் சில்ட்ரன்ஸ்' வெளியிட்டுள்ளது.

செய்தித்தாள் வாசிப்பது, நூலகம் பயன்படுத்துவது என பாடநூல்களைத் தாண்டி அவர்களைப் பண்படுத்துவதற்கான முன்வரைவாக இந்த நூலினைப் பார்க்க முடிகிறது. மாணவர்களைக் கையாளும் ஆசிரியர்களும், வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என முயலும் சமூக ஆர்வலர்களும் அவசியம் வாசிக்க வேண்டிய நூல். அனைவரிடமும் சென்று சேர வேண்டும்.

## :ப்ளாஷ்பேக்



## பெரியாரின் காதுகுத்து!


வீரமணி

என் தந்தை திராவிடர் கழகத்தில் மாவட்ட அளவிலான பொறுப்பிலிருந்தவர். அதனாலேயே எங்கள் குடும்பத்தில் நடக்கும் அனைத்து விழாக்களுக்கும் பெரியாரை அழைப்பது வழக்கமாக இருந்தது. என் சகோதரிகளுக்கும் எனக்கும் தமிழரசி, பெண்ணரசி, மங்கையற்கரசி, கலையரசி, வீரமணி என்று தந்தை பெரியார்தான் பெயர் வைத்தார். 1960-ஆம் ஆண்டு நவம்பர் 19 அன்று உசிலம்பட்டியில் நடைபெற்ற காதணி விழாவில், என் அக்காக்கள் தமிழரசி, பெண்ணரசி இருவருக்கும் தந்தை பெரியார் மடியில் வைத்து, காது குத்தினார்கள். அப்போது பெரியார் என் தந்தை திருமால் அவர்களிடம், 'நிறைய செலவு செய்து விழா எடுக்கிறாய், நான் வந்து சென்றதுக்கு, நீ அவசியம் நன்கொடை வழங்க வேண்டும்' என்று சொன்னாராம்.

**-தி.வீரமணி, கிளைக் கழகப் பிரதிநிதி, மணப்பாறை, திருச்சி மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்:90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### தேர்தல் பிரச்சார உத்திகள்!

**1957-ஆம் ஆண்டு தேர்தலின்போது கழகத்தின் பிரச்சார முறையும், சுவரொட்டிகளும் மக்களை ஈர்த்தன. கழகத்தின் 'போஸ்டர்' பிரச்சாரத்துக்கு முன்னால் வேறு கட்சிகளால் ஈடு கொடுக்க முடியவில்லை. இந்தப் பிரச்சார முறைகள், அப்போது இருந்த மற்ற கட்சிகளைக் காட்டிலும், கழகத்தின் மீதும், பேரறிஞர் அண்ணாவின் மீதும் மக்களுக்கு நம்பிக்கைக் கீற்று ஏற்பட வழி செய்தன. அப்போது 15 இடங்களில் வெற்றிபெற்று இருந்தாலும், 30 இடங்களில் மிகக் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில்தான் கழகம் தோல்வி கண்டிருந்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 288




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131